


# உள்ளாட்சி டுடே

தமிழ் வார இதழ்

ULLATCHI TODAY

WEEKLY

R.N.I. No. TN/TAM/2013/52170

வெளியீட்டாளர் &
ஆசிரியர் : R. ரவி




மலர் - 12
Volume - 12

இதழ் - 51
Issue - 51

03 ஜுன் 2025
03 June 2025

விலை : ரூ. 5.00
Rs. : 5.00

## டெல்லி படையெடுப்புக்கு ஒரு போதும் தமிழ்நாடு வீழாது: மதுரையில் மு.க.ஸ்டாலின் பேச்சு



டெல்லி படையெடுப்புக்கு ஒரு போதும் தமிழ்நாடு வீழாது. தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும். புதிதாக சிலர் நாங்கள்தான் மாற்று என்று இளைஞர்களை ஏமாற்ற வருகிறார்கள். அவர்களுக்கும் பதிலடி தர வேண்டும். என மதுரையில் நடைபெற்ற திமுக பொதுக்குழு கூட்டத்தில் மு.க. ஸ்டாலின் உரையாற்றினார்.

மு.க.ஸ்டாலின் உரை வருமாறு: வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மண்ணில் தமிழ்நாட்டின் எதிர்காலத்துக்கு தேவையான முடிவுகளை எடுக்கவும், தமிழ்நாட்டைச் சூழ்ந்து நிற்கும் பகையை எதிர்கொண்டு முறியடிக்க வியூகங்கள் அமைக்கவும் - வெற்றியை நோக்கி உழைக்கவும், இந்தப் பொதுக்குழுவை கூட்டியிருக்கிறோம். இங்கு கூடியிருக்கும் உங்களை பார்க்கும்போது, புது எனர்ஜி வருகிறது.

மதுரையில் ஆறு பொதுக்குழு நடைபெற்றிருக்கிறது. இது ஏழாவது பொதுக்குழு! ஏழாவது முறை கழகம் ஆட்சியமைக்க அடிகோலும் பொதுக்குழுதான் இது.

வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மண்ணில், இந்த மாபெரும் பொதுக்குழுவை எழுச்சியுடன் ஏற்பாடு செய்திருக்கும் அமைச்சர் மூர்த்திக்கு என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுகள், வாழ்த்துகள்.

அடுத்த ஆண்டு இந்த நேரத்தில் என்ன மாதிரி தலைப்புச் செய்தி வந்திருக்க வேண்டும் என்றால், ஏழாவது முறையாக திமுக ஆட்சி அமைத்தது. திமுக கூட்டணி வரலாறு காணாத வெற்றியைப் பெற்றது! இரண்டாவது முறையாக திராவிட மாடல் ஆட்சி தொடர்கிறது . இதுதான் தலைப்புச் செய்தியாக இருக்க வேண்டும். அதுக்கான வியூகத்தை வகுக்கும் பொதுக்குழுதான் இது.

‘உங்களால்தான் முடியும்...’ என்னைப் பொறுத்தவரைக்கும், பணிவுதான் தலைமைப் பண்பின் அடையாளம். சொல்லைவிட செயலே பெரிது. வரலாறு காணாத வெற்றியை நாம் பதிவு செய்வோம் என்று நான் சொல்வது, உங்கள் மேல் இருக்கும் நம்பிக்கையில்தான்.

சூரியன் நிரந்தரமானது. அதே போன்று கழகமும் நிரந்தரமானது. கழகம் எப்படி நிரந்தரமானதோ, அதேபோன்று கழக ஆட்சியும் நிரந்தரமானது என்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும். அந்த நிலையை உருவாக்க முடியும். உங்களால்தான் முடியும். நம்மால்தான் முடியும்.

திமுக.வுக்கு என்றைக்கும் ஊடக சொகுசு இருந்ததில்லை. ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் மேல்தான் அதிக விமர்சனங்கள் குவியும். ஆனால், திமுக ஆட்சிக்கு எதிரான அலையைவிட, ஆதரவு அலைதான் அதிகமாக வீசுகிறது. அது வெளியே தெரியாமல் மறைக்க - திசை திருப்ப சிலர் நினைக்கிறார்கள்.

பொருளாதாரரீதியான முட்டுக்கட்டைகள், அரசியல்ரீதியான முட்டுக்கட்டைகள், ஆளுநர் வழியாக முட்டுக்கட்டைகள், உரிமைகளை அபகரிக்கும் முட்டுக்கட்டைகள் என்று எத்தனை எத்தனையோ தடைகளை ஒன்றிய பாஜக அரசு போட்டாலும், அதை எல்லாம் கடந்து, இன்று இந்தியாவிலேயே வளர்ச்சியில் நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தியிருக்கிறோம்!

2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்கள் தான் இருக்கிறது. அதனால், வழக்கத்தைவிட அதிகமாக, திமுகவுக்கு எதிராக, ஆட்சிக்கு எதிராக அவதூறுகளை வீசுவார்கள். அவர்களின் பொய்களுக்கு முன்னால், நம்முடைய உண்மை மக்களிடம் சென்று சேர வேண்டும்.

கூட்டணியும் காரணம்: நான் தலைவராக பொறுப்பேற்றதில் இருந்து, நாம் தொடர்ந்து வெற்றி பெறுவதற்கான காரணங்களில் ஒன்று, நம்முடைய கூட்டணி. 2017-ஆம் ஆண்டு முரசொலி பவள விழாவில் நம்முடைய பயணம் தொடங்கியது. தமிழ்நாட்டு வரலாற்றிலேயே ஒரு கூட்டணி இத்தனை தேர்தல்களுக்கு தொடர்ந்ததாக வரலாறு இல்லை. நம்முடைய வெற்றிக் கூட்டணி வலுவாக தொடர்கிறது என்றால் அதுக்குக் காரணம், நம்முடைய கூட்டணி தோழர்களை நாம் மதித்து செயல்படுவதுதான்.

நம்முடைய கூட்டணித் தலைவர்களிடம் நான் எப்படி நட்போடும் பாச உணர்வோடும் பழகுகிறேனோ, நீங்களும் அதே உணர்வோடு கூட்டணிக் கட்சியினருடன் சேர்ந்து செயலாற்ற வேண்டும். சில இடங்களில் முரண்கள் இருந்தாலும், பேசி - விட்டுக்கொடுத்து பணியாற்ற வேண்டும். அப்போதுதான் நம்முடைய வெற்றிப் பயணத்தை தொடர முடியும்.

எதிர்க்கட்சி தலைவராக இருக்கும் பழனிசாமி என்ன நினைத்தார்? நம்முடைய கூட்டணி பிரிய வேண்டும் என்று நினைத்தார். அதுக்காக, என்னென்ன கதைகளையோ உருவாக்கினார்கள். 2024 நாடாளுமன்ற தேர்தலில், பா.ஜ.க.வுடன் பிரிந்த மாதிரி நடித்தால், நம்முடைய கூட்டணி உடையும் என்று நினைத்தார்கள். ஆனால், அவர்களின் எண்ணம் ஈடேறவில்லை.

புதிதாக 2 அணிகள்: கழகத்தில் இப்போது 23 அணிகள் இருக்கிறது. புதிதாக இரண்டு அணிகள் இன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது! இதில் பெரும்பாலான அளவில், நிர்வாகிகள் போடப்பட்டிருக்கிறார்கள். இன்னும் நிரப்பப்படாத பொறுப்புகளில் இளைஞர்களை நியமனம் செய்யுங்கள்! அணிகள் அனைத்துமே, தாய்க் கழகத்திற்கு வலுசேர்க்கத்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் இளைஞர்களுக்கு வாய்ப்பைக் கொடுங்கள். எந்தளவுக்கு இளைஞர்களுக்கு இடம் கொடுக்கிறீர்களோ, அந்தளவுக்கு கழகத்தில் புது ரத்தம் பாயும். செயல்பாடுகள் வேகமாக இருக்கும். வெற்றி உறுதி செய்யப்படும்.

தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்க, மண்டல வாரியாக பொறுப்பாளர்கள் வந்து உங்களை சந்திப்பார்கள். புதிய நிர்வாகிகள் எல்லாம் சிறப்பாக செயல்பட வேண்டும். 234 தொகுதிகளில் பார்வையாளர்களாக நியமிக்கப் பட்டவர்கள், அவர்கள் பணிகளை செய்துகொண்டு இருக்கிறார்கள். பூத் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கிறது. தேர்தலை சந்திக்க கழகத்தின் கட்டமைப்புகளை ஓராண்டுக்கு முன்பே முழுமையாக அமைத்துவிட்டோம். இதை வரும் காலங்களில் செயல்படுத்தினாலே பெரிய வெற்றியை எளிதாக அடையலாம்.

‘ஓரணியில் தமிழ்நாடு’ முதல் இரண்டு மாதங்களுக்கு, உங்களுடைய முதல் பணி என்பது, புதிய உறுப்பினர் சேர்க்கை. சிறப்புத் தீர்மானம் இயற்றியபடி, சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ விளக்கம் கொடுத்தபடி, ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற பெயரில் உறுப்பினர் சேர்க்கையை தொடங்க இருக்கிறோம். வீடு வீடாக சென்று உறுப்பினர் சேர்க்கையை நடத்த வேண்டும். தி.மு.க.வின் திட்டங்களை, சாதனைகளை, உரிமைப் போராட்டங்களை எடுத்துச் சொல்லுங்கள். இன்றைய நிலையில் கழக ஆட்சியின் திட்டங்கள் சென்று சேராத குடும்பமே தமிழ்நாட்டில் இருக்காது. ஒவ்வொரு குடும்பத்திலும் தி.மு.க.வுக்கு மகத்தான ஆதரவு இருக்கிறது. அவர்களில் ஆர்வமுள்ளவர்களை கட்சியில் உறுப்பினராக சேர்க்க வேண்டும்.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்கான படிவத்தை, விரைவில் அறிவாலயத்துக்கு வந்து பெற்று செல்ல வேண்டும். இந்தப் பணியை நானே தொடர்ந்து ஆய்வு செய்வேன். இங்கு வந்திருக்கும் நிர்வாகிகளுக்கு நான் போன் மூலமாக, தொடர்பு கொண்டு பேசுவேன். அப்போது எவ்வளவு உறுப்பினர் சேர்க்கை செய்திருக்கிறீர்கள் என்று நீங்கள் சொல்ல வேண்டும்.

வெற்றிச் செய்தியை தாருங்கள் - ஒருவரை நம்பி பொறுப்பை ஒப்படைத்துவிட்டால் அவர்கள் அதை சிறப்பாக செய்ய வேண்டும். தலைவர் சொன்ன பணியை முடித்துவிட்டோம், வெற்றி பெற்றுவிட்டோம் என்று சொல்ல வேண்டும். நான் உங்களிடமிருந்து எதிர்பார்ப்பது, அந்த வெற்றிச் செய்தியை மட்டும்தான். நான் கொடுத்த பொறுப்பை, சரியா செய்து அந்த வெற்றிச் செய்தியை தாருங்கள் என்பதுதான் என்னுடைய இந்தப் பொதுக்குழுச் செய்தி.

திராவிட முன்னேற்ற கழகம் இருக்கும் வரை, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கும் வரை, டெல்லி படையெடுப்புக்கு ஒருபோதும் தமிழ்நாடு வீழாது. தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும். பொதுக்குழுவில் தொடங்கியிருக்கும் இந்தப் பயணத்த - சட்டமன்றத் தேர்தல் வெற்றிவிழாப் பொதுக்கூட்டத்தில் நாம் நிறைவு செய்ய வேண்டும். அதில் மீண்டும் ஒன்றாக சந்திப்போம் என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு ஸ்டாலின் பேசினார்.

## சென்னையில் அரசு மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு (FOGDA) சார்பாக அரசு மருத்துவர்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் அருகில் அரசு மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு (FOGDA) சார்பாக அரசு மருத்துவர்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு மருத்துவர்கள் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது செய்தியாளர்களிடம் பேசிய அரசு மருத்துவர் சங்கங்களின் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் பாலகிருஷ்ணன் பேசியதாவது;

எங்களது முக்கிய அம்ச கோரிக்கைகளாக தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் 2009ம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட அரசு ஆணை 354 மறுசீராய்வு செய்து ஊதிய பட்டை 4ஐ 13வது ஆண்டில் வழங்கிட வேண்டும்.

ஆரம்ப சுகாதார மருத்துவ நிலைய மருத்துவர்களுக்கு படித்தொகை ரூ.3000 உடனடியாக வழங்கிட வேண்டும்.

அரசு ஆணை 4 (ம்) மூலம் நீக்கப்பட்ட 1500 -க்கும் மேற்பட்ட மருத்துவ கல்லூரி பதவிகளை மீண்டும் கொண்டு வர வேண்டும்.

நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர்களை நியமனம் செய்திட வேண்டும்.

சராசரியாக 8 லட்சம் நோயாளிகளுக்கு 80 ஆயிரம் மருத்துவர்கள் இருக்க வேண்டும் ஆனால் 20000 மருத்துவர்கள் உள்ளனர் போர்க்கால அடிப்படையில் 20 ஆயிரத்து ஒருவரை நியமித்திட வேண்டும்.

எங்களது கோரிக்கை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் இல்லை என்றால் 2019 போல் நாங்கள் உண்ணாவிர போராட்டத்தில் ஈடுபடுவோம்.

இவ்வாறு அதில் தெரிவித்தனர்.

- நிருபர் விக்னேஷ்

## நகைக் கடன் விதிகளை முழுமையாக திரும்பப் பெற சு.வெங்கடேசன் எம்.பி வலியுறுத்தல்



நகைக் கடனுக்கான ரிசர்வ் வங்கியின் புதிய அறிவிப்பை முழுமையாகத் திரும்பபெற வேண்டும் என மதுரை எம்.பி. சு.வெங்கடேசன் வலியுறுத்தியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினரும், மதுரை நாடாளுமன்ற உறுப்பினருமான சு. வெங்கடேசன் இன்று (மே 30) மதுரையில் செய்தியாளர்களிடம் கூறியது:

ரிசர்வ் வங்கி தங்க நகைக் கடன் சார்ந்து ஒரு வழிகாட்டு நெறிமுறைகளை ஏப்ரல் 9-ம் தேதி வெளியிட்டுள்ளது. இது மிக மோசமான நடைமுறை. பிரிவு 11 -ல் நகைக் கடன் பெறுவோர் நகை வைத்திருப்பதற்கான ஆவணங்களை செலுத்த வேண்டும் என்பதும் மோசமான ஓர் அறிவிப்பு.

மதுரை மாவட்டத்திலுள்ள வங்கிகள் இன்றைக்கு 65 சதவீதம் கடன் என்பதை நகைக் கடன்களாக தான் வழங்கியுள்ளனர். எந்த ஒரு ஆபத்தும் இல்லை. திருப்பி செலுத்துவதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய வேண்டும் என சொல்வது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும், நகைக் கடன் பெறும் காரணத்தை உறுதிப்படுத்த வேண்டும் என சொல்லப்படுகிறது. ஒருவர் தன்னுடைய பிள்ளையின் கல்வி அல்லது விவசாயத்துக்கு கடன் வாங்க முயற்சி செய்வாரா அல்லது கடன் பெறுவதற்கு உரிய ஆவணங்களைக் கேட்டு அரசு அலுவலகங்களுக்கு செல்வாரா?

பெரும்பாலும் நகைகளை யாரும் அழிக்க மாட்டார்கள். பல தலைமுறைகள் மாறி, மாறி வரும். இதற்கெல்லாம் ரசீது, ஆவணம் கேட்டால் எப்படி கொடுப்பது? ரிசர்வ் வங்கியின் புதிய அறிவிப்புக்கு தீர்வு காணவேண்டும் என ஏற்கெனவே டெல்லியில் செய்தியாளர்களிடம் வலியுறுத்தினோம். இதன்படி, ரிசர்வ் வங்கி ஏற்கெனவே அறிவித்த அறிவிப்புக்கான அறிக்கையை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது முதல் வெற்றி.

ரூ.2 லட்சம் வரை நகை கடன் பெறுபவர்களுக்கு எந்த விதிமுறையும் இல்லை என்றும், எளிய, நடுத்தர மக்களை பாதிக்கும் புதிய நடைமுறை குறித்து அனைவரின் கருத்தையும் கேட்டு ஆய்வு செய்த பின் அடுத்த ஆண்டு ஜனவரி 1-ம் தேதிக்குப் பிறகே நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்திருக்கிறது. இருப்பினும், நகைக் கடனுக்கான ரிசர்வ் வங்கியின் புதிய அறிவிப்பை முழுமையாக திரும்ப பெற வேண்டும், என்று அவர் கூறினார். இந்த சந்திப்பின்போது, மாநில செயற்குழு உறுப்பினர் மதுக்கூர் ராமலிங்கம் மாநகர் மாவட்ட செயலாளர் மா. கணேசன் உடனிருந்தனர்.

## பல்கலைகளில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்பாமல் உயர் கல்வியை திமுக சீரழிக்கிறது - ஓபிஎஸ்

பல்கலைக்கழகங்களில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்பாமல் உயர் கல்வியை திமுக சீரழித்துக் கொண்டிருப்பதாக முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் குற்றம்சாட்டியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், உயர் கல்வியால்தான் நாட்டின் வளர்ச்சியை உருவாக்க முடியும். அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைவது உயர் கல்வியே இப்படிப்பட்ட உயர் கல்வி உன்னத நிலையை அடைய வேண்டுமென்றால் பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்பட வேண்டும், கட்டமைப்பு வசதிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால், கடந்த நான்கு ஆண்டு கால திமுக ஆட்சியில், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாத அவல நிலை நிலவுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் மட்டும் 50 விழுக்காடு ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளதாகவும், இந்தப் பணியிடங்களில் முப்பது விழுக்காடு பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழக பதிவாளர்களை அரசு உயர் கல்வித் துறை கேட்டுக் கொண்டுள்ளதாகவும் செய்தி வந்துள்ளது.



இந்த முப்பது விழுக்காடு பணியிடங்களை நிரப்பும்போது, பத்து விழுக்காடு பணியிடங்கள் ஒய்வு பெற்ற பேராசிரியர்களைக் கொண்டும், பத்து விழுக்காடு பணியிடங்கள் தொழில் வல்லுநர்களைக் கொண்டும், பத்து விழுக்காடு பணியிடங்கள் வெளிநாட்டு பேராசிரியர்களைக் கொண்டும் நிரப்ப வேண்டும் என்றும் அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதிலிருந்து, பல்கலைக்கழகங்களில் காலியாக உள்ள உதவி பேராசிரியர். இணை பேராசிரியர் மற்றும் பேராசிரியர் பணியிடங்களை நிரப்ப கடந்த நான்கு ஆண்டு காலமாக திமுக அரசு அக்கறை செலுத்தவில்லை என்பது தெள்ளத் தெளிவாகிறது. ஐம்பது விழுக்காட்டிற்கு மேல் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கிறது என்றால். அங்கு தரமான கல்வியை எப்படி அளிக்க முடியும் என்ற கேள்வி இயற்கையாக எழுகிறது. இது ஒருபுறம் என்றால், மறுபுறம் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. முதுநிலைப் பட்டம், முனைவர் பட்டம் ஆகியவற்றைப் பெற்று அரசு கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் உதவிப் பேராசிரியர்களாக வேண்டும் என்ற கனவில் உள்ள இளைஞர்களின் எதிர்காலம் திமுக அரசின் இந்த முடிவினால் சிதைந்து போயிருக்கிறது. மொத்தத்தில், உயர் கல்வியிலும் அக்கறை இல்லாத, இளைஞர்களின் எதிர் காலத்திலும் அக்கறை இல்லாத அரசாக கொண்டிருக்கிறது. திமுக அரசின் மக்கள் கண்டனத்திற்குரியது. முதல்வர் ஸ்டாலின் இதில் தனிக் கவனம் செலுத்தி, பல்கலைக் கழகங்கள் மற்றும் அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை முறையாக உடனுக்குடன் நிரப்பி, அதன் மூலம் இளைஞர்களுக்கு நல்ல எதிர் காலத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் 6,500 ஸ்மார்ட் அங்கன்வாடி மையங்கள்: அமைச்சர் கீதா ஜீவன் தகவல்



தமிழகத்தில் 6,500 அங்கன்வாடி மையங்கள் 'ஸ்மார்ட் அங்கன்வாடி' மையங்களாக மாற்றப்பட்டுள்ளதாக அமைச்சர் பெ.கீதா ஜீவன் தெரிவித்தார்.

சிறுநீரகம் பாதிக்கப்பட்டு, அரசு மருத்துவமனைகளுக்கு டயாலிசிஸ் சிகிச்சை பெற வரும் நோயாளிகளுக்குச் சிறப்புப் புரத உணவாக 100 மில்லி பால், 2 முட்டை, ஒரு கப் சுண்டல், 3 பிஸ்கட் ஆகியவை வழங்கப்படும் எனத் தமிழக பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. அதன்படி தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டயாலிசிஸ் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குச் சிறப்புப் புரத உணவு வழங்குவதற்கான தொடக்க நிகழ்ச்சி இன்று (மே 30) நடைபெற்றது. மருத்துவமனை டீன் கு.சிவக்குமார் தலைமை வகித்தார்.

தமிழக சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நோயாளிகளுக்குச் சிறப்புப் புரத உணவுகளை வழங்கினார். அமைச்சர் கீதா ஜீவன் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: டயலாசிஸ் செய்யும் நோயாளிகளுக்குத் தினமும் புரதச் சத்துள்ள உணவு வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி அவர்களுக்கு ஒரு டம்ளர் பால், 2 முட்டை, ஒரு கப் சுண்டல், 3 பிஸ்கட் ஆகியவை தினமும் வழங்கப்படுகிறது. தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் தினமும் 22 பேர் டயலிசிஸ் செய்கிறார்கள். அவர்களுக்குத் தினமும் இந்த உணவு வழங்கப்படும். இது வெளியூர்களிலிருந்து வரும் நோயாளிகளுக்கு நிச்சயம் பயன் தரக்கூடியதாக இருக்கும்.

புத்தகம், சீருடை: கோடை விடுமுறைக்குப் பிறகு பள்ளிகள் ஜூன் 2-ம் தேதி திறக்கப்படுகின்றன. பள்ளி திறந்த அன்றே புத்தகங்கள், சீருடைகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதுபோல இந்த ஆண்டு முதல் அங்கன்வாடி மையங்களிலும் குழந்தைகளுக்கு முதல் நாளிலேயே புத்தங்கள், சீருடைகள் வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். அதன்படி தமிழகம் முழுவதும் 54 ஆயிரம் அங்கன்வாடி மையங்களிலும் ஜூன் 2-ம் தேதி குழந்தைகளுக்குப் புத்தங்கள், சீருடைகள் வழங்கத் தயாராக உள்ளன.

6500 ஸ்மார்ட் அங்கன்வாடி: தமிழகத்தில் கடந்த மார்ச் மாதம் வரை சுமார் 6,500 அங்கன்வாடி மையங்கள் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு, புதிய வண்ணங்கள் பூசப்பட்டு, எல்இடி டிவி வசதி, ஆர்ஓ கருவி உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் ஸ்மார்ட் அங்கன்வாடி மையங்களாக மாற்றப்பட்டுள்ளன. சிஎஸ்ஆர் நிதி, எம்எல்ஏ, எம்பி நிதி, மத்திய - மாநில அரசுகளின் சிறப்பு நிதி, மாவட்ட ஆட்சியரின் சிறப்பு நிதி போன்ற நிதியுதவிகளுடன் இந்த மையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் கழிப்பறை வசதி, குடிநீர் வசதி போன்ற வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

சிசு மரணம் குறைவு: எடை குறைவாகப் பிறக்கக்கூடிய குழந்தைகள் குறித்த விபரங்கள் சமூக நலத்துறை மூலம் பெறப்பட்டு, அந்த குழந்தைகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. அக்குழந்தைகளுக்குக் கூடுதல் சத்துணவு வழங்குவதுடன், தாய்மார்களுக்கு அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன.

அங்கன்வாடிகளுக்கு வரும் குழந்தைகள் மட்டுமின்றி, பிறந்த குழந்தைகள் வீடுகளிலிருந்தாலும், அங்கன்வாடி பணியாளர்கள் வீடு தோறும் சென்று, அக்குழந்தைகள் மீது சிறப்புக் கவனம் செலுத்தி ஊட்டச்சத்து வழங்கி வருகின்றனர். குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் மீது கவனம் செலுத்தி ஊட்டச் சத்துக்கள் வழங்கப்படுவதன் மூலம் தமிழகத்தில் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் 5 வயதுக்கு உட்பட்ட சிசு மரணம் குறைந்துள்ளது. இதற்காக சமூகநலத்துறை மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு முதல்வர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

காலை உணவுத் திட்டம்: தமிழக முதல்வரின் காலை உணவுத் திட்டம் அனைத்து இடங்களிலும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இது தொடர்பாகத் திட்டக்குழு மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில், பள்ளிகளில் காலை உணவு உண்ணும் பிள்ளைகளை நோய்களுக்காக மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லவில்லை எனப் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தளவுக்குக் குழந்தைகளின் ஆரோக்கியம் மேம்பட்டுள்ளதாகப் பெற்றோர்களே தெரிவித்துள்ளனர். அதுபோல குழந்தைகள் ஈடுபாட்டோடு படிப்பதாக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். காலை உணவுத் திட்டம் வரும் கல்வி ஆண்டிலிருந்து நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படவுள்ளது. இவ்வாறு அமைச்சர் கீதா ஜீவன் தெரிவித்தார்.

# 'தேமுதிகவுடன் சுமுகமான உறவு இருக்கிறது; குழப்பம் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டாம்' - இபிஎஸ்



தேமுதிகவுடன் சுமுகமான உறவு இருக்கிறது. ஏதாவது பேசி குழப்பம் ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்காதீர்கள். அது ஒரு போதும் நடக்காது. என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்.

முன்னதாக, இன்று காலையில் மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர். 2026-ல் தேமுதிகவுக்கு சீட் அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், அரசியல் பயணம் தேர்தலை ஒட்டியே இருக்கும் என்பதால், தேமுதிகவின் பயணமும் தேர்தலை ஒட்டியே இருக்கும். என்று சூசகமாகப் பேசினார். இதனால், அதிமுக முடிவில் தேமுதிகவுக்கு அதிருப்தி, கூட்டணியில் விரிசல் போன்ற விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில், கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, மதுரையில் நடந்த திமுக பொதுக்குழு கூட்டத்தில் அதிமுக பற்றி 27-வது தீர்மானம் கொண்டு வந்துள்ளனர். அதில் , துரோக அதிமுக என பயன்படுத்தியுள்ளனர். அது நாங்கள் இல்லை; திமுக தான் தமிழகத்துக்கு துரோகம் செய்தது. அதிமுகவை பொறுத்தவரை ஜெயலலிதா முதல்வராக இருந்த போதும் சரி, அவர் மறைவுக்குப் பின்னர் நான் முதல்வராக இருந்த போதும் அதிமுக ஆட்சியில் சிறப்பான திட்டங்களை மக்களுக்காக கொண்டு வந்து செயல்படுத்தினோம். சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருந்தது.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த நான்கு ஆண்டுகளாக மக்கள் விரோத ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தினம் தோறும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை, வழிப்பறி நடக்கிறது. தமிழகத்தில் மோசமான ஆட்சி நடைபெற்று கொண்டிருக்கிறது. ஸ்டாலின் மாடல் ஆட்சி தான் துரோக ஆட்சி. திமுக மத்திய அமைச்சரவையில் 16 ஆண்டு காலம் இடம் பெற்றிருந்தார்கள். அப்போது ஏன் கல்விக் கொள்கையில் இந்த திராவிட மாடல் அரசு கவனம் செலுத்தவில்லை?

அப்போதே கல்வியை மத்திய அரசு பட்டியலில் இருந்து மாநில அரசு பட்டியலுக்கு கொண்டு வந்திருக்கலாம். ஆட்சியில், அதிகாரத்தில் இருந்த போதெல்லாம் மக்களை பற்றியும், மாணவர்களை பற்றியும் கவலைப்படுவதில்லை. ஆட்சி அதிகாரம் இல்லாதபோது வேண்டுமென்றே திட்டமிட்டு மற்றவர்கள் மீது பழி சுமத்துவது தான் திமுகவின் வாடிக்கை.

முதல்வர் மதுரை வரும் போது சாக்கடை கழிவுநீர் செல்கின்ற கால்வாயை தூர்வாராமல் மிக மோசமாக இருந்தது. அது அவர்களுக்கே பிடிக்காமல் தான் திரை போட்டு மறைத்தனர். அப்படிப்பட்ட அவல ஆட்சி தமிழகத்தில் உள்ளது.

நடிகர் விஜய் என்னிடம் போனில் பேசவில்லை. ஆதவ் அர்ஜுனாவின் விமர்சன கருத்துக்கு அவர் பதில் அளித்துவிட்டார். அத்துடன் அந்த பிரச்சினை முடிந்துவிட்டது. தேமுதிகவுடன் சுமுகமான உறவு இருக்கிறது. ஏதாவது பேசி குழப்பம் ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்காதீர்கள். அது ஒரு போதும் நடக்காது. என்று கூறினார்.

பேட்டியின் போது முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, செ.ம.வேலுசாமி, எம்எல்ஏ-க்கள் அம்மன் கே.அர்ச்சுணன், கே.ஆர். ஜெயராம், பி.ஆர்.ஜி.அருண்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# தமிழின் தொன்மை, பெருமையை மத்திய அரசு ஏற்காது - சீமான்

தமிழின் தொன்மை, பெருமையை மத்திய அரசு ஏற்காது என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

மதுரையில் அவர் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: தமிழகத்தில் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் மக்களை நம்பி 234 தொகுதிகளிலும் போட்டியிடுகிறோம். ஒவ்வொரு தேர்தலிலும் எங்கள் கட்சி வாக்கு சதவீதம் உயர்ந்துள்ளது.

கன்னடர்களுக்கு தமிழர்கள் என்றாலே எப்போதும் வெறுப்பு தான். கீழடி ஆய்வறிக்கையை மத்திய அரசு ஏற்காது. கீழடியில் வெறும் 2 ஏக்கரில் மட்டும்தான் ஆய்வு நடந்துள்ளது. நூறு ஏக்கரிலும் ஆய்வு நடத்தியிருந்தால் இன்னும் அரிய தகவல்கள் கிடைத்திருக்கும்.

அந்தப் பெருமையை தமிழர்களுக்கும், தமிழ் இனத்துக்கும் கொடுக்கத் தயங்குவார்கள். பிரதமர் மோடி எங்கே போனாலும் தமிழின் பெருமையைப் பேசுகிறார். புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் தமிழில் கல்வெட்டு வைக்கவில்லை. இதைத் தமிழக எம்பிக்களும் கேட்கவில்லை.

தமிழின் தொன்மை, பெருமையை எப்படி ஏற்பார்கள்? மத்திய அரசுத் தேர்வில் பெரியாருக்கு சாதி சாயம் பூசியதாக விஜய் குற்றம்சாட்டியுள்ளார். பெரியாரே ராமசாமி நாயக்கர் என எழுதி கையெழுத்திட்டுள்ளார். தமிழகத்தில் பெரியார் என வெளியிடப்பட்ட படம் மற்ற மாநிலங்களில் ராமசாமி நாயக்கர் என வெளியிடப்பட்டது.



அதேநேரம், கர்நாடகத்தில் இருந்து வந்த ராமசாமி பெரியாருக்கு தமிழ் என்றாலே வெறுப்பு. அவரை தமிழர்கள் தலைவராக, தந்தையாக ஏற்கிறார்கள். பாமகவில் ராமதாஸ், அன்புமணி பிரச்சினை கஷ்டமாக உள்ளது. ராமதாஸ் இவ்வளவு கஷ்டப்பட்டு பேசியிருக்க வேண்டியதில்லை. இருவரும் அமர்ந்து பேசினால் பிரச்சினை சரியாகவிடும். ராமதாஸ் மனதில் இருந்ததை வெளியே சொல்லிவிட்டார். பாமகவில் ஏற்பட்டிருப்பது சிறிய முரண். விரைவில் சரியாகிவிடும். இவ்வாறு சீமான் கூறினார்.

# 2016 அக்டோபருக்கு முன் விற்கப்பட்ட தனி மனைகளை வரன்முறைப்படுத்த இணையவழியில் விண்ணப்பிக்கலாம்

கடந்த 2016 அக்.20-ம் தேதி அல்லது அதற்கு முன் விற்கப் பட்ட தனி மனைகளை எந்த காலக்கெடுவும் இன்றி இணையவழியில் விண்ணப்பித்து வரன்முறைப் படுத்திக் கொள்ளலாம் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து வீட்டுவசதித்துறை செயலர் காகர்லா உஷா வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது: கடந்த 2017-ம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணையில், கடந்த 2016 அக்.20-ம் தேதி மற்றும் அதற்கு முன் அனுமதியற்ற மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு, அதில் குறைந்த பட்சம் ஒரு மனையாவது விற்கப்பட்டு அதற்கான விற்பனைப் பத்திரம் கடந்த 2016 அக்.20 அல்லது அதற்கு முன்பதிவு செய்யப்பட்டிருந்தால், அந்த மனைப்பிரிவில் அமையும் விற்கப்பட்ட அல்லது விற்கப்படாத அனைத்து மனைகள் மற்றும் மனைப்பிரிவையும் வரன்முறைப்படுத்த அந்த விதிகள் வெளியிடப்பட்ட 6 மாதங்களுக்குள் கட்டாயம் விண்ணப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த வரையறையானது பல்வேறு அரசாணைகள் மூலம் வரும் 2026-ம் ஆண்டு ஜூன் 30-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.



இதற்கிடையில், 2025-26-ம் ஆண்டுக்கான சட்டப்பேரவை மானிய கோரிக்கையின்போது, வீட்டுவசதித் துறை அமைச்சர் சு.முத்துச்சாமி, "கடந்த 2016 அக்.20-ம் தேதிக்கு முன் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப் பிரிவுகளில், அந்த தேதிக்கு முன் பதிவு செய்யப்பட்ட தனி மனைகளுக்கு எந்த காலக்கெடுவும் இன்றி மனு பெறப்பட்டு வரன்முறை செய்து தரப்படும்" என அறிவித்தார்.

இந்த அறிவிப்பு தொடர்பாக, நகர ஊரமைப்பு இயக்குநர் அரசுக்கு அனுப்பிய கடிதத்தில், 2016 அக்.20-ம் தேதி அல்லது அதற்கு முன் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் தனி மனையாக வாங்கிய பொது மக்கள் வரன்முறைக்கு உரிய காலத்தில் விண்ணப்பிக்காமல் இருந்தாலும் அவர்கள் பயன் பெறும் வகையில் அவர்கள் பதிவு செய்த விற்பனை ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு அந்த மனையை எவ்வித காலக்கெடுவும் இன்றி இணையவழி மூலம் விண்ணப்பித்து ஏற்கெனவே உள்ள விதிகளில் எவ்வித மாற்றமும் இன்றி வரன்முறைப்படுத்த உத்தரவிடுமாறு கோரினார்.

அவரது கருத்துருவை கவனமாக பரிசீலித்த தமிழக அரசு, தனி மனைகளை ஆவணங்கள் அடிப்படையில் இணையவழி விண்ணப்பித்து வரன்முறைப்படுத்திக் கொள்ளலாம் என உத்தரவிட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# டெல்லி 'மதராசி கேம்ப்' மக்கள் சொந்த மாவட்டங்களுக்கு திரும்ப உதவி: தமிழக அரசு உறுதி

புதுடெல்லியின் 'மதராசி கேம்ப்' குடியிருப்பாளர்களில் உள்ள தமிழர்கள் தங்கள் சொந்த மாவட்டங்களுக்கு திரும்ப விரும்பினால், அவர்களுக்கு அரசு உதவிக்கரம் நீட்டும் என்றும், வாழ்வாதாரம் மற்றும் தேவையான பிற அடிப்படை உதவிகளும் வழங்கப்படும் என்றும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: 'மதராசி கேம்ப்' என்பது தெற்கு டெல்லி, நிஜாமுதீன் ரயில்வே நிலையத்துக்கு அருகிலுள்ள பராப்புல்லா ஜங்க்புரா வடிகாலின் கரையில் அமைந்துள்ள ஓரங்கட்டப்பட்ட குடிசைப் பகுதியாகும். இக்குடிசைப் பகுதியிலுள்ள 370 குடிசை வீடுகளில் பெரும்பாலானோர் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். டெல்லி உயர் நீதிமன்றம், 'மதராசி கேம்ப்' என்பது பராப்புல்லா வடிகாலின் கரையில் கட்டப்பட்ட அனுமதியில்லாத கட்டடம் / ஆக்கிரமிப்பு எனக் குறிப்பிட்டுள்ளது. இந்தக் குடியிருப்பினால், வடிகாலில் அடைப்பு ஏற்பட்டு, சுற்றியுள்ள பகுதிகளில் குறிப்பாக மழைக் காலத்தில் கடுமையான நீர் தேக்கம் ஏற்படுகிறது.

எனவே, டெல்லி நகர்புற குடியிருப்பு மேம்பாட்டு ஆணையம் (Delhi Urban Shelter Improvement Board) சட்டம் மற்றும் டெல்லி சேரி மற்றும் ஜேஜே குடியிருப்பு இடமாற்றக் கொள்கை, 2015-ன் கீழ் தகுதியான குடியிருப்பாளர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நீதிமன்றத்தின் உத்தரவுகளுக்கு இணங்க, குடியிருப்பாளர்களின் மறுவாழ்வு மற்றும் இடமாற்ற தகுதியை மதிப்பீடு செய்ய ஒரு விரிவான கணக்கெடுப்பு, தகுதி தீர்மானக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

இந்த செயல்முறையின் அடிப்படையில், 370 குடியிருப்பாளர்களில் 215 பேர் தகுதியுடையவர்களாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தகுதியுடைய பயனாளர்களுக்குத் டெல்லி மேம்பாட்டு ஆணையத்தின் Delhi Urban Shelter Improvement Boar பொருளாதார ரீதியாக பலவீனமான பிரிவுக்கான (சிநிறீ) குடியிருப்பு யூனிட்டுகள், நரேலா, டெல்லியில் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும், மதராசி கேம்ப் குடியிருப்பாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து சட்ட வழக்குகளும் டெல்லி உயர் நீதிமன்றத்தால் மே 9-ம் தேதியிட்ட உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. அந்த உத்தரவின் படி, ஜூன் 1ம் தேதி முதல் 'மதராசி கேம்ப்' பகுதிகளில் இடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'மதராசி கேம்ப்' பகுதியில் அனுமதியில்லாத கட்டிடங்களை இடிக்காமல் இருக்க குடியிருப்பாளர்களுக்கு இருந்த அனைத்து சட்ட வழிகளும் முழுமையாக முடிவடைந்து



விட்டன.

தமிழக முதல்வரின் உத்தரவின் படி, புது டெல்லியில் உள்ள 'தமிழ் நாடு இல்ல' அலுவலகம், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவதிலும் கண்காணிப்பதிலும் முக்கியப் பங்காற்றுகிறது. மாநிலத்துக்கு வெளியே வசிக்கும் தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள தமிழக அரசு, 'மதராசி கேம்ப்' குடியிருப்பாளர்களுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து, அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் தாமதமின்றி வழங்கப்படும் என்பதை உறுதி செய்கிறது.

தமிழக முதல்வரின் வழி நடத்தலின் கீழ், 'மதராசி கேம்ப்' குடியிருப்பாளர்கள் தங்கள் சொந்த மாவட்டங்களுக்கு திரும்ப விரும்பினால், அவர்களுக்கு தமிழக அரசு உதவிக் கரம் நீட்டும். வாழ்வாதாரம் மற்றும் தேவையான பிற அடிப்படை உதவிகளும் வழங்கப்படும்.

இந்த உதவிகள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் அலுவலகம் மூலம் சரியான நேரத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இதுவரை ஊழல் செய்யாதவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்: மாணவர்களுக்கு விஜய் அறிவுரை

உறுதியாக இருந்தால் நிச்சயம் சாதிக்க முடியும் என்று பள்ளி மாணவர்களுக்கு தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் அறிவுரை வழங்கியுள்ளார். தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 10, பிளஸ் 2 வகுப்புகளில் தொகுதி வாரியாக சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு, தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கல்வி விருது வழங்கும் விழா, மாமல்லபுரம் அருகே தனியார் சொகுசு விடுதியில் நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சியில் விஜய் பேசியதாவது: கல்வியில் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. நீட் தேர்வு மட்டும் உலகம் அல்ல. நீட்டை தாண்டிய இந்த உலகம் ரொம்ப பெரியது. அதில், நீங்கள் சாதிக்க வேண்டியது நிறைய உள்ளது. அதனால், உங்களின் மனநிலையை மிகவும் தைரியமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஜனநாயகம் என்ற ஒன்று இருந்ததால்தான், இந்த உலகம் சுதந்திரமாக இருக்க முடியும்.

பணம் கொடுத்து வாக்கு வாங்கி வெற்றி பெற்று விடலாம் என நினைப்பவர்களின் செயலை ஊக்கப்படுத்த வேண்டாம். பணம் வாங்காதீர்கள், உங்களின் பெற்றோரையும் வாங்க வேண்டாம் எனக் கூறுங்கள். அதைப் பின்பற்றுங்கள். ஆனால், அடுத்த ஆண்டு பாருங்கள் வண்டி, வண்டியாக கொண்டு வந்து கொட்டுவார்கள். அத்தனையும் உங்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம் தான். நல்லவர்கள், நம்பிக்கையானவர்கள், இதுவரை ஊழல் செய்யாதவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு பெற்றோர் மிகவும் அழுத்தம் கொடுக்க வேண்டாம். அவர்களுக்கு பிடித்த துறைகளில் சாதித்து காட்டுவார்கள். அதேபோல், சாதி, மதத்தை வைத்து பிரிவினை வளர்க்கும் சிந்தனை பக்கம் செல்லாதீர்கள். விவசாயிகள், தொழிலாளர்கள் சாதி, மதம் பார்த்து பொருட்களை உற்பத்தி செய்யவில்லை. அவற்றை போதை பொருட்களைப் போல ஒதுக்குவதுதான் நல்லது. உறுதியாக இருந்தால் நிச்சயம் சாதிக்க முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர், பிளஸ் 2 வகுப்பில்



தமிழக அளவில் 599 மதிப்பெண் பெற்று முதலிடம் பிடித்த மாணவி ஓவியா அஞ்சலி மற்றும் 10-ம் வகுப்பில் 499 மதிப்பெண் பெற்று முதலிடம் பிடித்த சோபியா ஆகியோருக்கு வைரத்தோடு மற்றும் பாராட்டு சான்றினை விஜய் வழங்கினார்.

பின்னர், 88 தொகுதிகளில் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற 676 மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ். காசோலைகளை வழங்கி பாராட்டினார்.இந்நிகழ்ச்சியில், அக்கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், தேர்தல் பிரிவு மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா மற்றும் மாணவ, மாணவிகள், பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பரமத்திவேலூர் அருகே 14 வயது சிறுமி குளிப்பதை வீடியோ எடுத்த டிரைவர் கைது



பரமத்திவேலூர் அருகே, 14 வயது சிறுமி வீட்டில் குளித்துக் கொண்டு இருந்ததை செல் போனில் வீடியோ எடுத்த லாரி டிரைவரை, போலீசார் போக்சோ வில் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் அடுத்துள்ள மண்டபத்துபாறை கிராமத்தை சேர்ந்தவர் பூவலிங்கம் மகன் பிரபு (எ) பிரசாந்த்குமார் (27).

லாரி டிரைவர். இவர் அதே பகுதியை சேர்ந்த அரசு பள்ளியில் 10ம் வகுப்பு படிக்கும் 14 வயது சிறுமி ஒருவர், தனது வீட்டில் குளித்துக்கொண்டு இருப்பதை, மறைந்திருந்து பார்த்ததுடன், தனது செல்போனில் வீடியோ எடுத்துள்ளார். இதனை பார்த்த சிறுமி அலறியடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்து, அவரது பெற்றோரிடம் தெரிவித்துள்ளார்.

அதிர்ச்சியடைந்த பெற்றோர், இதுகுறித்து பரமத்திவேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். அதன் பேரில் எஸ்ஐ சுமதி விசாரணை நடத்தினார். இதில் சிறுமி குளித்ததை லாரி டிரைவர் பிரபு செல்போனில் ஆபாச வீடியோ எடுத்தது உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து பிரபுவின் செல்போனை பறிமுதல் செய்த போலீசார், போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குபதிவு செய்து, நேற்று பிரபுவை கைது செய்து, பரமத்தி குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி, கிளை சிறையில் அடைத்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழக ரயில் திட்டங்களுக்கான நிதியை வேறு மாநிலங்களுக்கு திருப்பி விடுவதா? - அன்புமணி கண்டனம்



தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை வேறு மாநிலங்களுக்கு திருப்பி விடுவதை அனுமதிக்க முடியாது. தமிழகத்துக்கான புதிய ரயில் பாதை திட்டங்களை விரைந்து செயல்படுத்துவது குறித்து மத்திய அரசிடம் தமிழக அரசு பேச வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வலைதளப் பதிவில்: தமிழ்நாட்டில் திண்டிவனம் - திருவண்ணாமலை, சென்னை - மாமல்லபுரம்- கடலூர் உள்ளிட்ட பல்வேறு புதிய ரயில் பாதை திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூ.728 கோடியை ரயில்வே அமைச்சகத்திற்கு தெற்கு ரயில்வே துறை திருப்பி அனுப்பியிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன.

தமிழ்நாட்டில் ரயில்வே கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்கு எதிரான இந்த நடவடிக்கை கடுமையாக கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாட்டில் இன்றைய நிலையில், 10 புதிய ரயில்வே பாதை திட்டங்கள், 9 இரட்டைப் பாதைத் திட்டங்கள், 3 அகலப் பாதைத் திட்டங்கள் என மொத்தம் 22 திட்டங்கள் ரூ.33,467 கோடி செலவில் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இத்திட்டங்களுக்காக கடந்த ஆண்டு மார்ச் மாதம் வரை ரூ.7,154 கோடி மட்டுமே செலவிடப்பட்டுள்ள நிலையில், இந்தத் திட்டங்களை விரைவு படுத்த கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தி வரும் நிலையில், அதற்கு மாறாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியையும் மத்திய அரசுக்கு திருப்பி அனுப்புவது தமிழகத்திற்கு செய்யப்படும் துரோகம் ஆகும்.


தமிழக ரயில்வே திட்டங்களுக்கான நிதியை திருப்பி அனுப்பியதற்காக தெற்கு ரயில்வே சார்பில் கூறப்பட்டுள்ள காரணங்கள் ஏற்க முடியாதவை. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படாதது, நிலங்கள் கையகப்படுத்தப்படாதது ஆகியவையே இதற்கான காரணங்களாக கூறப்பட்டுள்ளன.

இது தவறு. கடந்த காலங்களில் இத்தகைய சூழல்கள் ஏற்பட்ட போது, செயல்படுத்த முடியாத நிலையில் உள்ள திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை தமிழகத்தில் நிலுவையில் உள்ள இன்னொரு திட்டத்திற்கு செலவழிப்பது தான் வழக்கமாக இருந்திருக்கிறது. தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை வேறு மாநிலங்களுக்கு திருப்பி விடுவதை அனுமதிக்க முடியாது.

தமிழகத்தில் ரயில்வே திட்டங்களை விரைவுபடுத்தும் விவகாரத்தில் தமிழக அரசு அதன் கடமையை செய்ய மறுப்பதும் கண்டிக்கத்த க்கது. கர்நாடக, மகாராஷ்டிரா உள்ளிட்ட பல மாநிலங்கள் திட்டச் செலவில் பாதியை தாங்களே ஏற்றுக் கொண்டு திட்டப் பணிகளை விரைவுப் படுத்தியுள்ளன. ஆனால், அத்தகைய முன்னெடுப்புகள் எதையும் தமிழக அரசு மேற்கொள்ளவில்லை.

தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள திட்டங்களுக்கு இப்போது ஒதுக்கப்படும் அளவில் தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால், இன்னும் 20 ஆண்டுகள் ஆனாலும் கூட அவற்றை செயல்படுத்தி முடிக்க முடியாது. எனவே, தமிழகத்திற்கான திட்டங்களை விரைந்து செயல்படுத்துவது குறித்து மத்திய அரசிடம் தமிழக அரசு பேச வேண்டும்; திட்டச்செலவில் ஒரு பகுதியை ஏற்க வேண்டும். தமிழகத் திட்டங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் ? எந்தெந்தத் திட்டங்கள் எந்தெந்த ஆண்டில் நிறைவேற்றி முடிக்கப்படும் ? என்பது குறித்த விவரங்கள் அடங்கிய கால அட்டவணையை ரயில்வே வெளியிட வேண்டும் என்று அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

# 'இன்ஸ்டா' காதலியை அபகரித்ததால் வாலிபரை அடித்து கொன்ற நண்பன்




சேலம் சூரமங்கலம் அரியா கவுண்டம்பட்டி பகுதியை சேர்ந்தவர் அஜித்குமார் (21). கட்டிட தொழிலாளியான, இவர் கடந்த 26ம் தேதி, அரியாகவுண்டம்பட்டியில் உள்ள நுகர்பொருள் வாணிப குடோன் பின்புறத்தில் காயங்களுடன் இறந்து கிடந்தார்.

இதுகுறித்து சூரமங்கலம் போலீசார் வழக்குப்பதிந்து அஜித்குமாரின் நண்பர்கள் 6 பேரை பிடித்து, போலீசார் விசாரித்தனர். இதில் பரபரப்பு தகவல்கள் வெளியானது.

அஜித்குமாரின் நண்பர் கொண்டலாம்பட்டியை சேர்ந்த நெட்டை கார்த்திக்.

இவர் திருமணமாகி கணவனை பிரிந்து தாய் வீட்டில் வசிக்கும் ஒரு பெண்ணுடன் இன்ஸ்டாகிராம் மூலம் பழகியுள்ளார்.

அதே பெண் அஜித்குமார் வசிக்கும் பகுதி என்பதால் அவரும், அந்த பெண்ணுடன் நேரில் பேசி பழகி வந்தார். தான் காதலிக்கும் பெண்ணிடம் நீ ஏன் பேசுகிறாய், என கார்த்திக் கோபம் அடைந்தார்.

தான் பழகும் பெண்ணுடனான பழக்கத்தை உடனே விட்டு விட வேண்டும் என நண்பனை மிரட்டியுள்ளார். ஆனால் அதற்கு அஜித்குமார் மறுத்துவிட்டார்.

தனது காதலியை அபகரிக்க முயலும் அஜித்குமாரை தீர்த்தக்கட்ட முடிவு செய்த கார்த்திக், தனது நண்பர்களான அரியாகவுண்டம்பட்டியை சேர்ந்த மணிகண்டன், அருண்குமார், வசந்த், வேலன், விக்ரம் மற்றும் 17 வயது சிறுவன் ஆகியோரின் உதவியை நாடியுள்ளார்.

சம்பவத்தன்று அஜித்குமாரை மது குடிக்கலாம் என அழைத்துச் சென்று, அனைவரும் மது அருந்தியுள்ளனர்.

போதையில் இருந்தபோது அஜித்குமாரை அனைவரும் சரமாரியாக தலையில் தாக்கியுள்ளனர்.

பின்னர் அவரை எட்டி உதைத்துள்ளனர். இதில் மயங்கி விழுந்த அஜித்குமாரை அங்கேயே போட்டு விட்டு அனைவரும் சென்று விட்டனர்.

இதில் அவர் இறந்து போனது தெரியவந்தது.

இந்த கொலை வழக்கில் மணிகண்டன், அருண்குமார், வசந்த், வேலன், விக்ரம் மற்றும் 17வயது சிறுவனை போலீசார் கைது செய்தனர்.

முக்கிய குற்றவாளியான கார்த்திக்கை பள்ளப்பட்டி போலீசார் வழிப்பறி வழக்கில் ஏற்கனவே கைது செய்துள்ளனர்.

சூரமங்கலம் போலீசார் கொலை வழக்கில் கார்த்திக்கையும் மீண்டும் கைது செய்தனர்.

அவர்களை கோர்ட்டில் ஆஜர் படுத்தி சிறையில் அடைக்க போலீசார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேங்காய் குடோனில் இருந்து அரங்கேற்றம்; 5 முகநூல் பக்கம் - 9 இன்ஸ்டாகிராம் மூலம் பல பெண்களை வீழ்த்திய காமக் கொடூரன்: தூத்துக்குடியில் சிக்கினான்



சென்னை அண்ணாநகர் பகுதியில் வசித்துவரும் 42 வயது மதிக்கத்தக்க பெண், நேற்றுமுன்தினம் அண்ணாநகர் சைபர் க்ரைம் காவல் நிலையத்தில் கொடுத்துள்ள புகாரில் கூறியிருப்பதாவது; கடந்த ஒரு வருடத்துக்கு முன்பு இன்ஸ்டாகிராம் மூலம் கோபி என்பவரின் பழக்கம் ஏற்பட்டது. இதன்பிறகு தினமும் இன்ஸ்டாகிராம் மூலம் பேசிவந்த நிலையில் திடீரென்று என் மீது சந்தேகம் ஏற்பட்டு இரவு நேரங்களில் யாரிடமும் பேசக்கூடாது, என்னிடம் மட்டும்தான் பேசவேண்டும் என்றார். இதன்பிறகு ஆபாச வீடியோக்களை வாட்ஸ்ஆப்பில் அனுப்பிவைத்து இதேபோல் எனது ஆசைக்கு இணங்க வேண்டும். இல்லையென்றால் உனது மகளின் படத்தை மார்பிங் செய்து இன்ஸ்டாகிராம் மூலம் பரப்பி விடுவேன் என்றார். இதனால் கோபியின் செல்போன் நம்பரை பிளாக் செய்துவிட்டேன். இன்ஸ்டாகிராம் பக்கத்தையும் பிளாக் செய்துவிட்டு புதிய செல்போன் நம்பரை வாங்கினேன்.

இதன்பிறகு கோபி, தனது அக்காவின் செல்போன் நம்பரை கண்டுபிடித்து அவரை மிரட்டி எனதுபுதிய செல்போன் நம்பரை பெற்று மீண்டும் என்னை தொடர்புகொண்டு நீ என்னிடம் பழகிவந்ததை என் கணவரிடம் தெரிவிப்பேன் என்று மிரட்டுகிறார். மீண்டும் இன்ஸ்டாகிராம் மூலம் ஆபாச வீடியோக்களை அனுப்பி தொல்லை கொடுத்து வருகிறார். இதனால் எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. எனவே கோபியை கைது செய்ய வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.இந்த புகாரின் அடிப்படையில், இன்ஸ்பெக்டர் சாந்திதேவி தலைமையில் தனிப்படை அமைத்து கோபியின் செல்போன் நம்பரை டவர் மூலம் கண்காணித்தபோது தூத்துக்குடி மாவட்டத்தில் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அங்கு சென்று கோபியை கைது செய்தனர். இவர் சிறுவயதிலேயே வேலைக்கு சென்று விட்டார். தற்போது தேங்காய் குடோனில் வேலை செய்துவருகிறார். இவரது மனைவி கோபித்துக்கொண்டு தனது தாய் வீட்டிற்கு சென்று விட்டார். இவ்வாறு தெரியவந்துள்ளது.

மேலும் கோபி, வெவ்வேறு பெயரில் ஐந்து முகநூல் பக்கங்களும் 9 இன்ஸ்டாகிராம் கணக்கு வைத்து நிறைய பெண்களுக்கு பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்துள்ளார். கோபியிடம் இருந்து செல்போனை பறிமுதல் செய்து அவரை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். "இன்ஸ்டாகிராம் ஆர்வம் உள்ள பெண்களுக்கு பலமுறை விழிப்புணர்வு ஏற்படுத்தியும் மீண்டும் இன்ஸ்டாகிராம் மூலம் பெண்கள் மாட்டிக்கொள்கின்றனர். இதனால் பல குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வரும் நிலைமை உருவாகி உள்ளது. இனிமேலாவது இன்ஸ்டாகிராம் மற்றும் இணையதளத்தில் பெண்கள் உஷாராக இருக்கவேண்டும்' என்று போலீசார் தெரிவித்துள்ளனர்.

# தமிழகத்துக்கான என் குரல் மாநிலங்களவையில் ஒலிக்கும்: கமல்ஹாசன் தகவல்



முதல்வர் மு.க.ஸ்டாலினை மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் நேற்று சந்தித்து, மாநிலங்களவைத் தேர்தலில் மநீம-க்கு இடம் ஒதுக்கியதற்கு நன்றி தெரிவித்தார்.

தமிழகத்தில் 6 மாநிலங்களவை எம்.பி.க்களை தேர்வு செய்வதற்கான தேர்தல் ஜூன் 19-ம் தேதி நடைபெற உள்ளது. திமுக கூட்டணிக்கு 4 இடங்கள் கிடைக்கக் கூடிய நிலையில் 3 இடங்கள் திமுகவுக்கும் ஒரு இடம் கூட்டணி கட்சியான மக்கள் நீதி மய்யம் கட்சிக்கும் ஒதுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, மாநிலங்களவைத் தேர்தலில் மநீம வேட்பாளராக கட்சியின் தலைவர் கமல்ஹாசன் போட்டியிடுவார் என அக்கட்சியின் நிர்வாகக்குழு - செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் மநீம தலைவர் கமல்ஹாசன், அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலினை நேற்று காலை சந்தித்தார். அப்போது மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட மநீம கட்சிக்கு இடம் ஒதுக்கியதற்காக முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்த சந்திப்பின்போது, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு, பி.கே.சேகர்பாபு, திமுக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித்தொடர்பாளர் டிகேஎஸ் இளங்கோவன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோரும், மநீம கட்சியின் பொதுச்செயலாளர் ஆ.அருணாச்சலம், துணை தலைவர்கள் ஏ.ஜி.மவுரியா, தங்கவேல், மாநிலச் செயலாளர்கள் முரளி அப்பாஸ், மூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

முதல்வரை சந்தித்த பிறகு கமல்ஹாசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான முன்னேற்பாடுகளை செய்யுமாறு முதல்வர் சொன்னார். அதேபோல், திமுக மூத்த நிர்வாகிகள் தங்கள் அறிவுரைகளையும் அனுபவங்களையும் எங்களிடம் கூறினார்கள். வேட்புமனு தாக்கல் எப்போது தாக்கல் செய்யலாம் என்பது குறித்து அவர்களிடம் கலந்தாலோசிக்கப்படும்.

நான் எப்போதுமே தமிழகத்துக்காகப் பேசிக்கொண்டிருக்கிறேன். தற்போது தமிழகத்துக்கான என் குரல் மாநிலங்களவையில் முதல்முறையாக ஒலிக்கப்போகிறது அவ்வளவுதான். ஆரம்பத்தில் திமுகவை எதிர்த்த நீங்கள் இப்போது இணைந்து செயல்படுகிறீர்களே என்று கேட்கிறீர்கள். நாட்டுக்கு தேவை என்பதால் திமுகவுடன் இணைந்து செயல்படுகிறேன்.

கன்னட மொழி தொடர்பாக நான் தெரிவித்த கருத்தால் எழுந்துள்ள சர்ச்சை குறித்தும், நான் மன்னிப்பு கேட்காவிட்டால் எனது படத்துக்கு தடை விதிக்கப்படும் என்று மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பது குறித்தும் கேட்கிறீர்கள். இதற்கு முன்பும் இது போன்று நான் மிரட்டப்பட்டிருக்கிறேன்.

சட்டம், நியாயத்தை நம்புகிறேன்: எனது கருத்து தவறாக இருந்தால் நான் மன்னிப்பு கேட்பேன். தவறாக இல்லாவிட்டால் நான் மன்னிப்பு கேட்க மாட்டேன். இது எனது வாழ்வியல் முறை. இது ஜனநாயக நாடு. நான் சட்டத்தையும் நியாயத்தையும் நம்புகிறேன். எப்போதும் அன்பு தான் வெற்றிபெறும். கன்னடம் மீதும், தெலுங்கு மீதும், கேரளம் மீதும் நான் வைத்திருக்கும் அன்பு உண்மையானது.

ஏதோ ஒரு மறைமுக செயல் திட்டத்தோடு செயல்படுபவர்களைத் தவிர வேறு யாரும் என்னை சந்தேகிக்க மாட்டார்கள். இவ்வாறு கமல்ஹாசன் கூறினார்.


## உள்ளாட்சி டுடே

**வெளியிடுபவர் & ஆசிரியர்**
R. ரவி
**துணை ஆசிரியர்**
M.K. முருகன், B.A., (திருச்சி)
R. பஞ்சவர்ணம் B.Sc., (சென்னை)
**செய்தி ஆசிரியர்**
R.D. குமார்
**துணை ஆசிரியர்**
M.அருள்மொழிதேவன், D.E.E., M.A.
M. பிரியா ராஜ்குமார்
**கௌரவ ஆசிரியர்**
ந.பா. சேதுராமன்
**ஸ்பெஷல் கரஸ்பாண்டன்ட்**
தாவூத் செரிப் (சென்னை)
S.A.S. பாண்டியன், (சென்னை)
**சிறப்பு நிருபர்**
A. ராமகிருஷ்ணன் (ராமேஸ்வரம்)
M. பாலசுப்பிரமணி B.A. (சென்னை)
**தலைமை நிருபர்**
கௌதம் ஜெயராம், B.Com., PGDBM.,
R. மனோஜ், B.E., (சென்னை)
M. காவியா, B.E., (சென்னை)
V. வீரமுத்து, B.B.A.,(சென்னை)
குணசேகரன், (பெரம்பலூர்)
P. பாலு, B.A., (சென்னை)
K.S. திலீப் B.Sc., (பள்ளிப்பட்டு)
பா.ரமேஷ்,
S. காந்திமதி B.Sc., (திருப்பத்தூர்)
S. சுகுமார் (சென்னை)
ஜோ. மைதிலி கோபிநாத் (சென்னை)
G. அருள்ராஜா (தூத்துக்குடி)
R.G. அதிஸ் (காஞ்சிபுரம்)
G. புவனேந்திரன், B.Com., (திருவண்ணாமலை)
E. செல்வவிநாயகம், B.Sc., B.Ed., LLB, (காஞ்சிபுரம்)
**நிருபர்கள்**
ஜெய்நுல் ஹசன், இப்ராஹிம்
G. துரை, R.கணேஷ், சுதாகர்,
T. ஆனந்தகுமார் (உடுமலைப்பேட்டை)
R. கோபால்
S. பார்த்திபன் (சென்னை)
முருகன் (ஈரோடு),
C. கிருபானந்தன் (சென்னை) (ஆன்மிகம்)
M. பார்த்திபன், சீனியர் ஸ்போர்ட்ஸ் ரிப்போர்ட்டர்
C. முருகன், (மணலி, புதுநகர்)
G. பாண்டிகுமார், (ராமேஸ்வரம் தாலுகா நிருபர்)
B. பார்த்தசாரதி, (திருவள்ளூர்)
R. தீபா (திருவள்ளூர்)
முருகன், (நந்தியம்பாக்கம்)
V. முரளிகிருஷ்ணன் (சென்னை)
S. சக்திவேல், (திருப்பூர்)
S. காளிதாஸ், (ராமேஸ்வரம்)
கபடி சுரேஷ்
J. மலர்மன்னன் (திருவொற்றியூர்)
M. சண்முகம் (சென்னை)
**ஸ்பெஷல் தலைமை புகைப்பட கலைஞர்**
V. ரவிசந்திரன் (குடியாத்தம்)
**புகைப்பட கலைஞர்**
A. ராஜா B.Com., (சென்னை)
S. கண்ணன் (கொருக்குப்பேட்டை)
C. லீலாகுமார் B.Com., (சென்னை)
P. செல்வகுமார், (திருச்சி)
**வடிவமைப்பு**
Kala Graphics, Ch. - 600081.
**சிறப்பு சட்ட ஆலோசகர்**
R.சரவண அரவிந்த், B.A., M.L.,
**சட்ட ஆலோசகர்**
K. கோகுல்ராம், M.Com., M.Phil., M.L.,
J. அன்புராஜன், B.Com., B.L.,
P.ராஜா M.Sc., M.L., (வழக்கறிஞர்)
N. வெங்கட்ராமன், M.Com., M.Phil., B.Ed., B.L.,
D. கோபிநாதன் M.A., B.L.,
S. தாமஸ் M.A., L.L.B, (மூத்த வழக்கறிஞர்)
M. குணசீலன் B.Com., M.L.,
S. ஓம்சிவகுமார் B.A., B.L.,
ஐயப்பன் B.Sc., B.L.,
R. மதன்குமார், B.A., LLB.,

# முக்கூடல் பகுதியில் மான்களை வேட்டையாடிய 3 பேர் கைது



முக்கூடல் பகுதியில் 2 மான்களை வேட்டையாடிய 3 பேரை வனத்துறையினர் கைது செய்தனர். தலைமறைவான மேலும் ஒருவரை வனத்துறையினர் தீவிரமாக தேடி வருகின்றனர். நெல்லை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் திருக்குறுங்குடி முதல் கடையம் வரை 895 சதுர கிலோ மீட்டர் பரபரப்பளவில் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் அமைந்துள்ளது.

பல்லுயிர் பெருக்கத்திற்கு புகழ் பெற்ற இக்காப்பகத்தில் புலி, சிறுத்தை, யானை, கரடி, சிங்க வால் குரங்கு, செந்நாய், கடமான், ராஜநாகம், கருமந்தி உள்ளிட்ட அரிய வகை பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த வனவிலங்குகள் உணவு, குடிநீருக்காக வனப் பகுதியில் இருந்து வெளியேறி குடியிருப்பு பகுதிக்குள் வருகிறது.

குறிப்பாக பாபநாசம் வனச் சரகத்தில் மான், கரடி, மிளா போன்ற வனவிலங்குகள் மேற்கு தொடர்ச்சி மலையடிவார பகுதியில் சுற்றி திரிகிறது. வனப்பகுதியில் இருந்து வெளியேறும் வன விலங்குகளை பாதுகாப்பாக வனப் பகுதிக்குள் விரட்டி விடுவது தான் வனத்துறையினரின் முதன்மை பணி. இதற்காக வனப் பணியாளர்கள் ஆங்காங்கே நியமிக்கப் பட்டுள்ளனர்.

ஆனால் அவர்கள் மலையடிவாரத்தில் வனவிலங்குகள் சுற்றி திரிவதை கண்டு கொள்வதில்லை. இதை பயன்படுத்திக் கொண்ட சிலர் மான், உடும்பு, மிளா போன்ற வனவிலங்குகளை அடிக்கடி வேட்டையாடி வருவதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக பொதுமக்கள் புகார் அளித்தால் மட்டுமே வனத்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று முன் தினம் பாபநாசம் வனச்சரகம் வெளிமண்டல பகுதியான மதுரா கோட்ஸ் முதல் தலையணை செல்லும் வழியில் புள்ளி மான் கறிகளை வெட்டுவதாக வனத் துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து பாபநாசம் வனச்சரகர் குணசீலன் தலைமையில் வனப்பணியாளர்கள் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர்.

அப்போது பாபநாசம் பொதிகையடி பகுதியை சேர்ந்த முரளி மகன் மாணிக்கராஜ், கீழக்கொட்டாரம் பகுதியை சேர்ந்த ஆறுமுகம் மகன் கோகுலகிருஷ்ணன் ஆகிய 2 பேரும் சேர்ந்து முக்கூடல் தாளார்குளம் பகுதியில் உள்ள சுப்புக்குட்டி தேவர் மகன் ராமையா என்பவர் தோட்டத்தில் வைத்து 2 புள்ளி மான்களை வேட்டையாடியுள்ளனர்.

பின்னர் மான் கறிகளை சாக்கு பையில் எடுத்து கொண்டு பாபநாசம் தலையணை பகுதியில் மாரி மகன் சுரேஷ் என்பவருடன் காத்திருந்தனர். அப்போது அங்கு வந்த வனத்துறையினர் மான் கறிகளுடன் நின்று கொண்டிருந்த 3 பேரையும் கையும், களவுமாக பிடித்தனர்.

பின்னர் அவர்களை அம்பை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய வனத்துறையினர் பாளை சிறையில் அடைத்தனர். தலைமறைவாகவுள்ள மேலக்கல்லூர் கிராமத்தை சேர்ந்த ராமையா என்பவரை தேடி வருகின்றனர்.

இது குறித்து வனத்துறையினர் கூறுகையில், ‘முக்கூடல் அருகே தனியாருக்கு சொந்தமான தோட்டத்தில் 2 புள்ளி மான்களை வேட்டையாடிய அவர்கள் சென்னை பதிவெண் கொண்ட காரில் அந்த 2 மான்களையும் பாபநாசம் பகுதிக்கு கொண்டு வந்துள்ளனர்.

அங்கு மான் கறியை பங்கு போட்டுக் கொண்ட அவர்கள் விற்பனைக்காகவும் பதுக்கி வைத்துள்ளனர். இதுகுறித்து ரகசிய தகவல் கிடைத்தது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மான் கறியை பதுக்கி வைத்திருந்தவர்களை சுற்றி வளைத்தோம்.

பின்னர் அவர்களை பாபநாசம் வனச்சரக அலுவலகத்துக்கு அழைத்து சென்று விசாரணை நடத்தினோம்.

இதில் அந்த கும்பல் மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் சுற்றித்திரியும் வனவிலங்குகளை அடிக்கடி வேட்டையாடி வந்துள்ளனர்.

பின்னர் அங்கேயே பாகங்களை தனித்தனியாக வெட்டி எடுத்து விட்டு காரில் கடத்தி சென்று விற்பனை செய்து வந்துள்ளனர்.

மீதமுள்ள பாகங்களை மலையடிவாரத்தில் புதைத்து வந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் மேலும் ஒருவருக்கு தொடர்பு இருப்பது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து அவரை தேடி வருகிறோம்.

வேட்டையாட பயன்படுத்திய ஆயுதங்கள் மற்றும் காரையும் பறிமுதல் செய்துள்ளோம்’ என்றனர்.



குமரி மாவட்டம் கொல்லங்கோடு அருகே 12 வயது சிறுவன் பெற்றோரிடம் கோபித்துக்கொண்டு வீட்டின் மேல் மாடி ஜன்னலில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.






# பொள்ளாச்சி அருகே காப்பகத்தில் இருந்து மாயமானவர் வழக்கில் திருப்பம்; அரை நிர்வாணமாக்கி, மிளகாய் பொடி தூவி சித்ரவதை செய்து வாலிபர் அடித்துக்கொலை: கைதான 11 பேர் திடுக்கிடும் வாக்குமூலம்



பொள்ளாச்சி அருகே காப்பகத்தில் பெண் நிர்வாகி முகத்தில் எச்சில் துப்பிய ஆத்திரத்தில் மனவளர்ச்சி குன்றிய வாலிபரை நிர்வாணப்படுத்தி, மிளகாய் பொடியை உடலில் தூவி கொடுமைப்படுத்தி கிரிக்கெட் பேட்டால் சரமாரியாக தாக்கி கொன்றது தெரியவந்துள்ளது.

கோவை மாவட்டம், சோமனூர் அருகே மாதப்பூரை சேர்ந்தவர் ரவிக்குமார். இவரது மகன் வருண்காந்த் (22). மனவளர்ச்சி குன்றியவர். இதற்காக பொள்ளாச்சி அருகே உள்ள மனநல காப்பகத்தில் சிகிச்சைக்காக சேர்த்திருந்தனர்.

இந்த நிலையில் வருண்காந்த் திடீரென மாயமானார். விசாரணையில் காப்பக நிர்வாகிகள் வருண்காந்தை அடித்துக்கொன்று நடுப்புணி அருகே உள்ள பி.நாகூரில் உள்ள தோட்டத்தில் குழி தோண்டி புதைத்தது தெரிய வந்தது. இது குறித்த புகாரின் பேரில் கடந்த 24ம் தேதி வருண்காந்த் சடலத்தை போலீசார் தோண்டி எடுத்தனர்.

இதையடுத்து காப்பக நிர்வாகி கிரிராம் (36), நிர்வாகி சாஜியின் தந்தை செந்தில்பாபு (55), காப்பாளர்கள் ரித்தீஷ் (26), சதீஷ் (25), ஷீலா (27), பணியாளர் ரங்கநாயகி (32) ஆகிய 6 பேரை முதலில் கைது செய்தனர். முக்கிய குற்றவாளிகளான சாஜி (32), மனநல ஆலோசகரும், காப்பக நிர்வாகியுமான கவிதா (52), கவிதாவின் கணவர் லட்சுமணன் (56), மகள்கள் ஸ்ருதி (24), ஸ்ரேயா (26) ஆகிய 5 பேரை 10 நாட்களுக்கு பின்னர் தனிப்படை போலீசார் கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் கைது செய்தனர். இவர்கள் 11 பேர் மீதும் கொலை, கொலையை மறைத்தது, கூட்டு சதி, தடயங்களை அழித்தது என 6 பிரிவுகளில் வழக்குப் பதிந்து, கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.

வருண்காந்த் கொலை குறித்து கைதானவர்கள் அளித்த வாக்குமூலம் வருமாறு: கடந்த பிப்ரவரி 5ம் தேதி வருண்காந்தை அவரது பெற்றோர் காப்பகத்தில் அனுமதித்தனர். வருண்காந்த் எங்களது பேச்சை கேட்காமல் அதிகமாக கோபப்பட்டார்.

கடந்த 9ம் தேதி அங்குள்ளவர்களை மேட்டுப்பாளையத்திற்கு சுற்றுலா அழைத்துச் சென்றோம்.

ஆனால் வருண்காந்த்தை மட்டும் விட்டுச்சென்றோம். இதே போல் ஒரு பிறந்தநாள் விழாவிற்கும் அவரை விட்டு மற்றவர்களை அழைத்துச்சென்றோம். இதனால் கடந்த 12ம் தேதி வருண்காந்த் எங்களை பார்த்து கூச்சல் போட்டு, கவிதா மீது எச்சில் துப்பினார். இதனால் ஆத்திரம் அடைந்த நாங்கள் அவரை பயங்கரமாக தாக்கினோம். இதன்பின்னர் அவர் சரிவர சாப்பிடவில்லை. இதனால் அவரை அரை நிர்வாணமாக்கி, உடலில் மிளகாய் பொடி தூவி, கிரிக்கெட் பேட் மற்றும் ஸ்டெம்பால் தாக்கினோம். இதில் மயங்கி விழுந்த வருண்காந்த் இறந்தார். இதுபற்றி வெளியில் சொல்லக்கூடாது என்று ஊழியர்களை மிரட்டினோம்.

அவர்களது செல்போனை வாங்கி சுவிட்ச்-ஆப் செய்து வைத்துக்கொண்டோம். கொலையை மறைப்பதற்காக, வருண்காந்த் உடலை பாலித்தீன் கவரில் சுற்றி, கவருக்குள் மாட்டுச்சாணம் போட்டு காரில் ஏற்றி நடுப்புணியில் உள்ள கவிதாவின் தோட்டத்திற்கு கொண்டு சென்று குழிதோண்டி புதைத்து, அதன்மேல் செடிகளை நட்டுவித்தோம். பின்னர் வருண்காந்த்தை ஆழியாருக்கு அழைத்து சென்றதாகவும், அங்கு காணாமல் போனதாகவும் நாடகமாடினோம். ஆனால் போலீசார் விசாரணையில் கண்டுபிடித்து விட்டனர். இவ்வாறு அவர்கள் கூறியதாக போலீசார் தெரிவித்தனர்.

# சோளிங்கர் அருகே தந்தையின் வீட்டுக்கு வந்தபோது பயங்கரம்; ஒருதலை காதலால் மாணவியின் உயிரை பறித்த கொடூரம்: வாலிபர் தற்கொலை முயற்சி

சோளிங்கர் அருகே காதலை ஏற்க மறுத்த பள்ளி மாணவியை வீடு புகுந்து கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டு ஒருதலை காதலன் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார். ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் அருகே உள்ள புலிவலம் கிராமத்தை சேர்ந்தவர் ஜெகத்குமார்(40), கார்பெண்டர். இவரது மனைவி பிரியா (35). மகன் கார்த்திக் (17), மகள் ஜனனி (15). தம்பதிக்கு இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கடந்த சில ஆண்டுகளாக பிரிந்து வாழ்கின்றனர். இதனால் பிரியா தனது தாய் வீடான திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே உள்ள கே.ஜி. கண்டிகையில் மகன் மற்றும் மகளுடன் வசிக்கிறார். அங்குள்ள பள்ளியில் கார்த்திக் பிளஸ் 2 தேர்ச்சி பெற்றார். ஜனனி 10ம் வகுப்பு தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றிருந்தார்.

இந்நிலையில் கோடை விடுமுறை காரணமாக தந்தையை பார்க்க வந்த ஜனனி கடந்த ஒரு மாதமாக புலிவலம் கிராமத்திலேயே தங்கியிருந்தார். ஜெகத்குமாரின் அக்கா சென்னையை சேர்ந்த வாணி தனது மகள்கள் லக்ஷயா (16), சரண்யா (11) ஆகியோருடன் புலிவலம் வந்திருந்தார். இந்நிலையில் நேற்று மாலை வாணியும் அவரது இளைய மகள் சரண்யாவும் வீட்டு வெளியே அமர்ந்திருந்தனர். அப்போது பின்பக்க வாசல் வழியாக கத்தியுடன் திடீரென வீட்டுக்குள் ஒரு வாலிபர் வந்துள்ளார். அங்கு அறையில் இருந்த ஜனனியை அந்த வாலிபர், கத்தியால் சரமாரி குத்தியுள்ளார். இதில் வயிறு,



கழுத்து உள்ளிட்ட இடங்களில் கத்திக்குத்து விழுந்ததில் கதறினார். இதை பார்த்து அதிர்ச்சியடைந்த லக்ஷயாவும் கூச்சலிட்டபடி அந்த வாலிபரை தடுக்க முயன்றார். லக்ஷயாவையும் அந்த வாலிபர் கத்தியால் குத்தியுள்ளார். இதனால் கூச்சலிட்டபடியே லக்ஷயா வீட்டின் வெளியே ஓடிவந்தார்.

அதற்குள் அந்த வாலிபர் முன்பக்க கதவை தாழ்ப்பாள் போட்டுக்கொண்டார். ஜனனியை மீண்டும் கத்தியால் சரமாரி குத்தியுள்ளார். பின்னர் அந்த வாலிபர், தனக்கு தானே கத்தியால் கீறி தற்கொலைக்கு முயன்றார். வீட்டுக்குள் நடந்த சம்பவம் குறித்து கதறி அழுதபடி லக்ஷயா, தனது தாயிடம் கூறினார். சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினரும் ஓடிவந்தனர். கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தனர். ஆனால் அதற்குள் ரத்த வெள்ளத்தில் ஜனனி இறந்து கிடந்தார். தற்கொலைக்கு முயன்ற வாலிபரை சரமாரி அடித்து உதைத்தனர். இதுகுறித்து தகவலறிந்த சோளிங்கர் மற்றும் கொண்டபாளையம் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து படுகாயமடைந்த லக்ஷயா மற்றும் வாலிபரை வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஜனனியின் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்தனர்.

முதற்கட்ட விசாரணையில் மாணவியை கொன்று தற்கொலைக்கு முயன்ற வாலிபர் திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அடுத்த கே.ஜி.கண்டிகையை சேர்ந்த சுப்பிரமணி(21). கே.ஜி.கண்டிகையில் ஜனனி வசிக்கும் வீட்டின் அருகே சுப்பிரமணி வசிக்கிறார். இவர் மாணவியை அடிக்கடி பின் தொடர்ந்து சென்று காதலிப்பதாக கூறி வந்துள்ளார். இதனையறிந்த ஜனனியின் தாய் பிரியா, அந்த வாலிபரை கண்டித்துள்ளார். ஜனனியும் அந்த வாலிபரை தவிர்த்து வந்தார். தனது காதலை ஜனனி ஏற்க மறுத்ததால் சுப்பிரமணி ஆத்திரமடைந்தார். இதனால் அவரை கொலை செய்ய திட்டமிட்டுள்ளார்.

இந்நிலையில் ஜனனி புலிவலம் கிராமத்தில் உள்ள தந்தையின் வீட்டில் தங்கியிருப்பதை அறிந்த சுப்பிரமணி, நேற்று கத்தியுடன் வந்து குத்தி கொலை செய்தது தெரியவந்தது. சுப்பிரமணி தற்போது தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளதால் அவருக்கு மயக்கம் தெளிந்த பின்னரே விசாரணை நடத்த முடியும் என்றும், விசாரணையில் மேலும் பல தகவல்கள் வெளியாகலாம் என போலீசார் தெரிவித்தனர். ஒருதலை காதலால் மாணவியை வாலிபர் குத்திக் கொலை செய்துள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.





கடந்த 29/5/25 அன்று மூத்த குத்துச்சண்டை வீரர் ஸ்டைல் கிங் பாக்ஸர் K.மோகன் அவர்களுக்கு பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இவருடைய பிறந்தநாளில் வாழ்த்தும் பெரியவர் மூத்த குத்துச் சண்டை வீரர் பாக்ஸர் பக்வத்சலம் அவர்களும், பெரியவர் மூத்த குத்துச் சண்டை வீரர் K.G.சன்முகம் அவர்களும், தமிழ்நாடு புரபொஷனல் பாக்ஸிங் அசோசியேசன் மூத்த பாக்ஸர் ராஜேந்திரன் அவர்களும் வாழ்த்திய போது... மற்றும் அவருடைய குடும்பத்தாரிடம் இருந்த போது எடுத்த படம்...

# பொள்ளாச்சி காப்பக கொலையில் கைதானவர்களிடம் 18 பவுன் சுருட்டிய எஸ்ஐ கைது



கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் உள்ள ஒரு தனியார் காப்பகத்தில் சேர்க்கப்பட்ட, சோமனூரை சேர்ந்த ரவிக்குமார் மகன் வருண்காந்த் (22) கடந்த மாதம் 12ம் தேதி அடித்து கொலை செய்யப்பட்டு, தோட்டத்தில் குழிதோண்டி புதைக்கப்பட்டார். இந்த கொலை வழக்கில் காப்பக நிர்வாகிகள் உள்பட 11 பேரை ஏஎஸ்பி கிருஷ்டிசிங் தலைமையிலான தனிப்படையினர் கைது செய்தனர். குற்றவாளிகளிடம் விசாரணை மேற்கொள்ளும் தனிப்படையில் ஒருவராக, மகாலிங்கபுரம் காவல் நிலைய எஸ்ஐ நவநீதகிருஷ்ணன் (32) இருந்தார்.

இந்நிலையில், காப்பக நிர்வாகிகளை கைது செய்தபோது அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 18 பவுன் நகை மற்றும் ரூ.1.52 லட்சம் ரொக்கத்தை எஸ்ஐ நவநீதகிருஷ்ணன் கணக்கில் கொண்டு வராமல் கையாடல் செய்ததாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக, எஸ்ஐ நவநீதகிருஷ்ணனிடம் போலீஸ் உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.ஆனால், அவர் தனக்கு எதுவும் தெரியாதது போல் பதில் அளித்துள்ளார். இருப்பினும், உயர் அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தியதில் போலீஸ் காவலுக்கு செல்ல வேண்டியவர்கள் அணிந்திருந்த நகை மற்றும் அவர்கள் வைத்திருந்த பணத்தை கணக்கில் காட்டாமல் கையாடல் செய்து மறைத்து வைத்திருந்ததை அவரே ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து மகாலிங்கபுரம் போலீசார் எஸ்ஐ நவநீதகிருஷ்ணன் மீது, கைதானவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட நகை, பணத்தை கணக்கில் கொண்டு வராமல் மறைத்து கையாடல் செய்ததாக, வழக்குப் பதிந்து நேற்று அவரை கைது செய்தனர். மேலும், அவரிடம் இருந்து 18 பவுன் நகை மற்றும் ரூ.1.52 லட்சம் ரொக்கத்தை பறிமுதல் செய்தனர். இச்சம்பவம் பொள்ளாச்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## 2026ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் அதிமுக ஆட்சி அமைய அனைவரும் பாடுபட வேண்டும் என அதிமுக செய்தி தொடர்பாளர் முன்னாள் அமைச்சர் பொன்னையன் தெரிவிப்பு



கருத்து வேறுபாடுகள் கட்சியில் இருப்பது சகஜம்தான் அதனை மறந்து ஒற்றுமையாக செயல்பட்டு 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் அதிமுக ஆட்சி அமைய அனைவரும் பாடுபட வேண்டும் என அதிமுக செய்தி தொடர்பாளர் முன்னாள் அமைச்சர் பொன்னையன் தெரிவித்தார்.

திருவள்ளூர் வடக்கு மாவட்ட அதிமுக சார்பில் ஆண்டார்குப்பம் பகுதியில் பூத் கமிட்டி மற்றும் யஸிபு 2 நியமித்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் பலராமன் தலைமையில் இன்று நடைபெற்றது.

இதில் அதிமுக செய்தி தொடர்பாளரும் முன்னாள் அமைச்சருமான பொன்னையன் கலந்து கொண்டார்.

திமுகவைப் போன்று கூடுதலாக ஒன்றிய செயலாளர்களை நியமிக்க வேண்டும் அப்போது தான் தொகுதியில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் சென்று சிறப்பாக கட்சி பணி செய்ய முடியும் அதிமுக தலைமை இடத்தில் கூறி தேர்தலுக்கு முன் புதிய ஒன்றிய செயலாளர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுங்கள் என்றும் அப்போதுதான் அதிமுக வெற்றி பெற முடியும் என கட்சியினர் ஆலோசனைக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்தனர்

பின்னர் முன்னாள் அமைச்சர் பொன்னையன் பூத் கமிட்டி விண்ணப்பங்களை கட்சியினருக்கு வழங்கி பேசுகையில்,

விஜய் கட்சி திமுகவைப் போன்று இளைஞர்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பதால் 45 வயதிற்கு குறைவானவர்களுக்கு பூத் கமிட்டியில் பொறுப்புகள் வழங்கப்பட்டு தேர்தலில் சுறுசுறுப்பாக பணியாற்ற நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் கருத்து வேறுபாடுகள் கட்சியில் இருப்பது சகஜம்தான் அதனை மறந்து ஒற்றுமையாக செயல்பட்டு 2026 ஆம் ஆண்டு தேர்தலில் அதிமுக ஆட்சி அமைய அனைவரும் பாடுபட வேண்டும் என்று தெரிவித்தார் இக்கூட்டத்தில் கும்முடிபூண்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விஜயகுமார், ஒன்றிய கழக செயலாளர்கள் முத்துகுமார், கோபால் நாயுடு பொன்னுதுரை, பானு பிரசாத், தமிழ்செல்வன், சுமத்ராகுமார் , மகேந்திரன், செல்வகுமார், தயாளன், சிவகுமார் சுரேஷ் முல்லை வேந்தன், ராகேஷ், வழக்கறிஞர் ஸ்ரீதர், ரமேஷ், கோதண்டம் உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## தங்கைக்கு காதல் தொல்லை கொடுத்து போட்டோ வெளியிட்டதால் வாலிபருக்கு மது கொடுத்து குளத்தில் மூழ்கடித்து கொலை: சட்ட கல்லூரி மாணவன், உறவினர் கைது



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே கிளியூர் கிராமத்தில் உள்ள குளத்தில் நேற்று முன்தினம் வாலிபர் ஒருவர் சடலமாக மிதப்பதாக திருநாவலூர் போலீசாருக்கு தகவல் வந்தது.

அதன்பேரில் சம்பவ இடத்துக்குச் சென்ற போலீசார் சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் விசாரணை செய்ததில் அவர் நரிப்பாளையம் கிராமத்தை சேர்ந்த அண்ணாமலை மகன் கரும்பு வெட்டும் கூலி தொழிலாளி சுபாஷ் (25) என்பதும், கொலை செய்யப்படும் போது அவருடன் இருவர் இருந்ததும் தெரிய வந்தது.

இதுகுறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். அப்போது நரிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த சட்ட கல்லூரி மாணவன் பிரகாஷ் (29), கரும்பு வெட்டும் கூலி தொழிலாளி அய்யனார் (22) ஆகிய இருவரும் சுபாஷை அழைத்து சென்றது தெரிந்தது. அவர்களை பிடித்து போலீசார் விசாரித்ததில் கொலை செய்ததை ஒப்புக்கொண்டனர். இதுகுறித்து அவர்கள் போலீசில் அளித்த வாக்குமூலத்தில் கூறியிருப்பதாக போலீசார் கூறியதாவது: சட்டக் கல்லூரி மாணவரான பிரகாஷின் தங்கையை கடந்த 4 வருடங்களுக்கு மேல் சுபாஷ் காதலித்து வந்ததாகவும், பின்னர் காதல் முறிவு ஏற்பட்ட பிறகும் தொடர்ந்து சுபாஷ் காதலிக்கு செல்போன் மூலம் தொடர்பு கொண்டு தொல்லை கொடுத்து வந்துள்ளார்.

இதுகுறித்து பிரகாஷ் பலமுறை எச்சரித்தும் கேட்காத நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பிரகாஷின் தங்கையுடன் இருந்த சில போட்டோக்களை சுபாஷ் வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் பதிவு செய்துள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த பிரகாஷ் தனது உறவினர் அய்யனாருடன் சேர்ந்து சுபாஷை கொலை செய்ய திட்டமிட்டுள்ளார்.


அதன்படி நேற்று முன்தினம் அய்யனார் மூலம் மது குடிப்பதற்காக அவரது நண்பரான சுபாஷை அழைத்துச் சென்றுள்ளனர்.

அப்போது கிளியூர் கிராமத்தில் மதுவாங்கி 3 பேரும் குடித்துள்ளனர்.

இதில் சுபாஷை அதிகமாக மதுவை குடிக்க வைத்துள்ளனர். பின்னர் போதை தெளிய வேண்டும் என்றால் தண்ணீரில் குளித்தால் சரி ஆகி விடும் எனக் கூறி சுபாஷை அழைத்து சென்று கிளியூர் கிராமத்தில் உள்ள ஒரு குளத்தில் குளிப்பதுபோல் நடித்து சுபாஷை குளத்தில் அழுத்தி மூழ்கடித்து கொலை செய்துவிட்டு இருவரும் தப்பி சென்றுள்ளனர். இவ்வாறு போலீசார் தெரிவித்தனர்.

இதனையடுத்து போலீசார், பிரகாஷ், அய்யனார் ஆகிய இருவரையும் கைது செய்து உளுந்தூர்பேட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி கடலூர் சிறையில் அடைத்தனர்.

## தொழிலதிபர்களின் மனைவி, மகள்களை ஆபாச படம் எடுத்து பணம், நகை பறிப்பு: மனைவியுடன் ஸ்கெட்ச் போட்டு உல்லாச வாழ்க்கை வாழ்ந்த வாலிபர்



சென்னை மதுரவாயல் பகுதியைச் சேர்ந்தவர் 45 வயது தொழிலதிபர். இவரது மனைவி மற்றும் பிள்ளைகள் கோவையில் வசித்து வருகின்றனர். ஒவ்வொரு வாரமும் இவர் மனைவி, பிள்ளைகளை பார்க்க கோவை வந்து செல்வது வழக்கம். இந்நிலையில் இவரது செல்போன் எண்ணுக்கு ஆப் மூலம் கடந்த மாதம் அழைப்பு ஒன்று வந்துள்ளது. அதில் பேசிய மர்ம நபர், தொழிலதிபர் தனது மனைவி, பிள்ளைகளை பார்க்க கோவைக்கு வரக்கூடாது என்றும், வந்தால் கொலை செய்து விடுவேன் என்றும் மிரட்டல் விடுத்துள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த தொழிலதிபர் அழைப்பு வந்த எண் குறித்து விசாரணை நடத்தினார். இதுகுறித்து தொழிலதிபர் சென்னை கோயம்பேடு போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில், கோவை ரத்தினபுரியை சேர்ந்த ஸ்வீட்சன் என்ற வாலிபர் என்பது தெரியவந்தது. நாராயணன் என்ற பெயரில் வாங்கிய சிம் கார்டை ஸ்வீட்சன் பயன்படுத்தி தொழிலதிபரை மிரட்டியது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து சென்னை தனிப்படை போலீசார் ரத்தினபுரியில் உள்ள ஸ்வீட்சன் வீட்டிற்கு வந்து அவரை கைது செய்ய முயன்றனர்.

அப்போது போலீசாரை பார்த்த ஸ்வீட்சன் வீட்டின் ஜன்னல் கண்ணாடியை உடைத்து குடும்பத்துடன் தப்பிச் சென்றார். தற்போது அவர் கேரளாவில் பதுங்கி இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. அதன்பேரில் தனிப்படை போலீசார் கேரளா விரைந்துள்ளனர். இதுகுறித்து போலீசார் கூறியதாவது: கோவை ரத்தினபுரி பகுதியைச் சேர்ந்தவர் ஸ்வீட்சன் (30). இவர் சரவணம்பட்டி பகுதியில் உள்ள தனியார் கல்லூரியில் இசை பிரிவில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். கோவையில் உள்ள பல்வேறு நிறுவனங்களில் பகுதி நேரமாக இசை வாசிக்கும் பணியையும் செய்து வருகிறார்.

அப்படி இசை அமைக்க செல்லும் இடங்களில் வரும் தொழிலதிபர்களின் மகள் மற்றும் மனைவியை குறிவைத்து பழகி ஆபாசமாக போட்டோக்களை எடுத்து அவர்களிடம் பழகி பணம், நகை பறித்துள்ளார். அவர்களும் குடும்ப மானம் கருதி கேட்கும் பணம் மற்றும் நகையை கொடுத்து விடுவார்கள். இதில் சென்னையை சேர்ந்த ஒரு தொழிலதிபரின் மனைவியை மயக்கி அவரிடம் காதல் மொழி பேசி அதை வைத்து மிரட்டி பணம், நகை பறித்துள்ளார்.

பணத்திற்காக ஸ்வீட்சன் தனது மனைவி, சகோதரி, தந்தை என குடும்பத்தோடு சம்பந்தப்பட்ட தொழிலதிபர்களின் குடும்பத்தினரிடம் பழகி வந்துள்ளார். பின்னர் அந்த குடும்பத்தில் உள்ள பெண்களை வளைத்து பேசி தனது வலைக்குள் விழ வைப்பார்.இதற்காக ஸ்வீட்சன் சம்பந்தப்பட்ட பெண்களிடம் இருந்தே சிம் கார்டு, செல்போன் உள்ளிட்டவற்றை வாங்கிக்கொண்டு அதன் மூலமாக பேசி வந்துள்ளார்.

வாட்ஸ் அப், டெலிகிராம் உள்ளிட்ட சமூக தளங்களை பயன்படுத்தாமல் அரபு நாடுகளில் பயன்படுத்தும் ஆப் மூலம் பேசி வந்துள்ளார். இந்த ஆப்பில் பேசினால் யாரும் கண்காணிக்க முடியாது என்ற விஷயத்தை சம்பந்தப்பட்ட பெண்களிடம் கூறி பேசி வந்துள்ளார். தொழிலதிபர்கள் வெளியூர் செல்லும் சமயத்தில் அவர்களது மனைவிகளிடம் இரவு நேரங்களில் வீடியோ காலில் பல மணி நேரம் காதல் மொழி பேசி வந்துள்ளார்.

இரவு நேரங்களில் தனது மனைவி இருக்கும்போதே அவர் பல பெண்களிடம் வீடியோ கால்களில் பேசி போட்டோ எடுத்து வைத்துள்ளார். வெளியிடங்களுக்கு செல்லும் சமயத்தில் சகஜமாக போட்டோ எடுப்பது போல எடுத்து வைத்துக் கொள்வார். பின்னர் அந்த புகைப்படங்களை சம்பந்தப்பட்ட பெண்களின் கணவர் அல்லது தந்தையிடம் காண்பித்து விடுவேன் என கூறி லட்சக்கணக்கில் பணம், நகைகளை பறித்து விடுவார்.

இதற்கு அவரது மனைவி மற்றும் குடும்பத்தினர் உடந்தையாக இருந்து உள்ளனர். சகோதரிக்கு திருமண செலவு உள்ளது என்றும், தந்தைக்கு மருத்துவ செலவு உள்ளது எனவும் விதவிதமாக கதைகளை சொல்லி பணத்தை வாங்கி விடுவார்.மாதத்திற்கு சில ஆயிரங்களை சம்பாதித்த ஸ்வீட்சன் மற்றும் அவரது மனைவி, குடும்பத்தார் சொகுசு கார் வாங்கி உல்லாச வாழ்க்கை வாழ்ந்து உள்ளனர். சென்னை தொழிலதிபரின் மனைவி போன்று 10க்கும் மேற்பட்ட பெண்களிடம் ஸ்வீட்சன் இதுபோல பழகி பணத்தை ஏமாற்றி பறித்துள்ளதாக கூறப்படுகிறது. ஸ்வீட்சனின் ஆசைப்பேச்சில் மயங்கி பாதிப்படைந்த பெண்கள் இன்னும் சிலர் புகார் அளிக்க உள்ளனர். இவ்வாறு போலீசார் தெரிவித்தனர்.

## போலீஸ் அதிகாரி மகள் எனக்கூறி காதல் வலைவீசி வாலிபர்களிடம் மோசடி செய்த இளம்பெண் கைது



போலீஸ் அதிகாரியின் மகள் எனக்கூறி காதல் வலை வீசி வாலிபர்களிடம் நகை, பணம் மற்றும் செல்போன் பறித்து மோசடி செய்த இளம்பெண் கைது செய்யப்பட்டார்.

தெலங்கானா மாநிலம், நல்கொண்டா மாவட்டம் மிரியாலகுடா அடுத்த லாவுடிதாண்டாவை சேர்ந்தவர் பிரத்யுஷா (28).

இவர் ஐதராபாத்தில் உள்ள ஒரு விடுதியில் தங்கியுள்ளார். இவர் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் செல்போன்களை லாவகமாக திருடி அதனை விற்று பணம் சம்பாதித்து வந்துள்ளார். மேலும் தன்னை ஏஎஸ்பியின் மகள் என்றும், ஐதராபாத் நிம்ஸ் அரசு மருத்துவமனையில், ரேடியோலிஜிஸ்ட் நிபுணராக உள்ளதாகவும், ஐ.ஏ.எஸ். தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று கலெக்டருக்கு தேர்வாகி உள்ளதாகவும் விரைவில் கலெக்டராகி விடுவேன் என்றும் கூறி பலரை ஏமாற்றி வந்துள்ளார்.

குறிப்பாக வசதிபடைத்த இளைஞர்களை காதல் வலை வீசி அவர்களிடம் இருந்து செல்போன், நகை, பணம் ஆகியவற்றை பறித்து வந்தார். அவர்களை ஏமாற்றியவுடன் தனது செல்போன் எண்ணை மாற்றிவிட்டு மீண்டும் வேறு வாலிபரை ஏமாற்றுவதை தொடர்ந்துள் ளார்.

இதேபோல் சில வாரங்களுக்கு முன் நர்கட்பள்ளி பகுதியில் வசிக்கும் டாக்டர் ஒருவருக்கு காதல்வலை வீசி அவரிடம் இருந்து ரூ.3 லட்சம் வாங்கி ஏமாற்றியுள்ளார்.

இதுகுறித்து அவர் அளித்த புகாரின்பேரில் நல்கொண்டா போலீசார், நேற்று முன்தினம் பிரத்யுஷாவிடம் விசாரித்தனர். விசாரணையில் பல போலீஸ் நிலையங்களில் பிரத்யுஷா மீது மோசடி, திருட்டு வழக்கு இருப்பதும் தெரிய வந்தது. இதையடுத்து போலீசார் வழக்கு பதிவு செய்து பிரத்யுஷாவை கைது செய்து தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

## 17 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை: வாலிபருக்கு சாகும் வரை ஆயுள்



ஊட்டியில் 17 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வாலிபருக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து ஊட்டி மகளிர் விரைவு நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பளித்தது. நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே பகுதியை சேர்ந்தவர் பிரமோத் குட்டன் (26). கூலி தொழிலாளி. கடந்த 2020ம் ஆண்டு இவருடைய பள்ளி தோழி ஒருவரின் மூலம், அவருடைய 17 வயது தோழி பிரமோத் குட்டனுக்கு அறிமுகமானார்.

கடந்த 2020ம் ஆண்டு கொரோனா காலகட்டத்தில் பள்ளி, கல்லூரிகள் இல்லாத நிலையில், பிரமோத் குட்டன் அந்த 17 வயது சிறுமியை ஊட்டி உள்ள அரசு தாவரவியல் பூங்காவுக்கு அழைத்து சென்றும், திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறியும் பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இதில் அந்த சிறுமி கர்ப்பமானார். ஆனால் இது குறித்து அவர் யாரிடமும் எதுவும் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில் 2021ம் ஆண்டு அந்த சிறுமி கோவையில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் சேர்ந்து படித்தார். கல்லூரி விடுதியில் சிறுமிக்கு பெண் குழந்தை பிறந்து இறந்தது. இது தொடர்பாக சரவணம்பட்டி போலீசார் விசாரித்து வந்த நிலையில், இந்த வழக்கு ஊட்டி அனைத்து மகளிர் போலீஸ் ஸ்டேஷனுக்கு மாற்றப்பட்டது. இதையடுத்து போலீசார் போக்சோ வழக்குப்பதிவு செய்து பிரமோத் குட்டனை கைது செய்தனர்.

இந்த வழக்கு ஊட்டியில் உள்ள மகளிர் விரைவு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் பிரமோத் குட்டன் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதை தொடர்ந்து அவருக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி எம்.செந்தில்குமார் தீர்ப்பளித்தார். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அரசு தரப்பில் ரூ.2 லட்சம் நிவாரணம் வழங்க உத்தரவிட்டார். இந்த வழக்கில் அரசு தரப்பில் வழக்கறிஞர் பி.செந்தில்குமார் ஆஜராகி வாதாடினார்.

## கண்டுகொள்ளாத போக்குவரத்து காவலர்கள்!





சென்னை, புதுவண்ணை,39 வார்டு கிராஸ் சாலையில் தினசரி போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது. இந்த கிராஸ் சாலையில் பொது மக்கள் அதிகமாக நடமாட்டம். அதுமட்டும் அல்ல, இருசக்கர வாகனம், ஆட்டோ, நான்கு சக்கர வாகனங்கள் வருவதும் போவதுமாய் இருக்கிறது. அதே போல் இந்த போக்குவரத்து பிரச்சனை இந்த பகுதியில் இருக்கும் போக்குவரத்து காவலருக்கே தெரியும். பலமுறை பொதுமக்கள் புகார் கொடுத்தும் எந்த விதமான நடவடிக்கை இல்லை. இப்போதாவது இந்த பிரச்சனை தீருமா என்று இந்த பகுதி மக்கள் எதிர்பார்ப்பு.

## திருவள்ளூர் மாவட்டம், நந்தியம்பாக்கம், மாரியம்மன் நகரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ வலம்புரி விநாயகர் ஆலயத்தின் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம்; உள்ளூர், வெளியூர், வெளி மாநில பக்தர்கள் திரளானோர் பங்கேற்று சுவாமி தரிசனம்!




திருவள்ளூர் மாவட்டம்,நந்தியம்பாக்கம்,மாரியம்மன் நகரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ வலம்புரி விநாயகர் ஆலயத்தின் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. கடந்த மே மாதம் 29ஆம் தேதி மஞ்சள் இடித்தல் பரதநாட்டியத்துடன் தொடங்கிய நிகழ்ச்சியானது தொடர்ந்து கடந்த மூன்று நாட்களாக கணபதி ஹோமம் நவகிரக ஹோமம் உள்ளிட்ட பல்வேறு ஹோமங்கள் மற்றும் மூன்று கால யாக பூஜைகள் நடைபெற்று நிகழ்ச்சியின் முக்கிய தினமான இன்று விநாயகருக்கு கலச அர்ச்சனை,கோ பூஜை,மகாபூர்னாதி நடைபெற்று கும்பம் புறப்பாடு எனும் யாத்ராதானம் நடைபெற்று கலச கோபுரத்திற்கு புனித நீராட்டலான மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் அனைவருக்கும் தீர்த்த பிரசாதம் எனும் அன்னதானம் வழங்கப்பட்டது.

ஆலய உபயதாரர்களான அச்சுதன் நாயர்-சரஸ்வதி,நாராயணன்-திவ்யா கிருஷ்ணன் ஆகியோர் உபயத்துடன் ஸ்ரீமான் சதிஷன் பட்டாச்சாரியார் ஸ்ரீ மான் நரசிம்ம சிவாச்சாரியார், ஸ்ரீ மான் பிரமோகன் ஆகியோர் நடத்தி வைத்த கும்பாபிஷேக நிகழ்ச்சியினை கோவில் நிர்வாகிகள் முருகேசன்,சந்திரசேகர்,ஜெயமதன் மற்றும் மாரியம்மன் நகர் இளைஞர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் இணைந்து நடத்தினர். சிறப்பு அழைப்பாளர்களாக நந்தியம்பாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கலாவதி நாகராஜன் கலந்து கொண்டார்.

## வீட்டை பூட்டிவிட்டு, சாவியை வீட்டு வாசலில் வைத்திருந்த நிலையில், நோட்டமிட்ட மர்ம நபர்; நகை மற்றும் பணம் திருட்டு!



சென்னை, புதுவண்ணாரப்பேட்டை, சுப்புராயன் தெருவை சேர்ந்தவர் ஆகாஷ்(25), ஏசி மெக்கானிக்காக வேலை செய்து வருகிறார் இவர் மனைவி உமா மகேஷ்வரி, ராயபுரம், என்.என் கார்டன் பகுதியில் தனியார் நிறுவனத்தில், கணக்காளர் பணிபுரிகிறார் இந்த நிலையில் தம்பதியர் இருவரும் வழக்கம் போல் வேலைக்கு சென்று விடுவர். நேற்று முன்தினம் காலை வழக்கம் போல் வேலைக்கு சென்ற தம்பதியினர், வீட்டை பூட்டி விட்டு வாசலில் உள்ள சாமி படம் முன்பு சாவியை வைப்பது வழக்கம் மாலை வேலை முடித்தவுடன் கணவன் மணி இருவரும் ஒன்றாக வீட்டுக்கு வந்துள்ளனர் வைக்கப்பட்டிருந்த இடத்தில் சாவியை எடுத்து பூட்டை திறந்து உள்ளே சென்று பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர் பீரோவில் இருந்த இரண்டு சவரன் நகை , 350 கிராம் வெள்ளி நகை மற்றும் 10,000ஆயிரம் பணம் கொள்ளையடிக் கப்பட்டிருந்தது. உடனே தண்டையார்பேட்டை போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது சம்பவ இடத்துக்கு வந்த போலீசார் விசாரணை நடத்தினர். அதில், தம்பதியர் வேலைக்கு செல்லும்போது, வீட்டை பூட்டிவிட்டு, அதன் சாவியை சாமி படம் முன்பு வைத்திருப்பதை நோட்டமிட்ட மர்ம நபர் அந்தச் சாவியை எடுத்து வீட்டின் பூட்டை திறந்து உள்ளே சென்று பீரோவை உடைத்திருப்பது முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது இதனைத் தொடர்ந்து அத்த திருநங்கை தேடும் பணியில் தண்டையார்பேட்டை போலீசார் அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமராவை ஆய்வு செய்து தப்பி ஓடிய கொள்ளை என்னை தேடி வருகின்றனர்



மா... மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (27.5.2025) கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருவான்மியூர், அரு... திருக்கோயிலுக்கு ஓதுவார் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பார்வைதிறனற்ற மாற்றுத்திறனாளி செல்வி எஸ்.எஸ்.பிரியவதனா அவர்களுக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, திரு. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தாயகம் கவி, திரு. அ. வெற்றியழகன், திரு. ஜோசப் சாமுவேல், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (27.5.2025) கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருவான்மியூர், அருள்மிகு பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் திருக்கோயிலுக்கு ஓதுவார் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பார்வைதிறனற்ற மாற்றுத்திறனாளி செல்வி எஸ்.எஸ்.பிரியவதனா அவர்களுக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, திரு. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தாயகம் கவி, திரு. அ. வெற்றியழகன், திரு. ஜோசப் சாமுவேல், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.





புதுப்பிக்கப்படுவதற்கு முன்



புதுப்பிக்கப்பட்ட பின்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (27.5.2025) கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட ஜெனரல் குமாரமங்கலம் குளம் மற்றும் பூங்காவினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, திரு. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தாயகம் கவி, திரு. அ. வெற்றியழகன், திரு. ஜோசப் சாமுவேல், துணை மேயர் திரு. மு. மகேஷ்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை இன்று (27.5.2025) தலைமைச் செயலகத்தில் நான் முதல்வன் திட்டத்தின், தமிழ்நாட்டில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் சிறந்த திறமையாளர்களுக்கு உதவித்தொகை வழங்கும் (ஸ்கவுட்) திட்டத்தின் கீழ் தென்கொரியா நாட்டின் பல்கலைக் கழகங்களில் உலகளாவிய செயல்முறை பயிற்சி பெற்று வந்த 6 மாணவ, மாணவிகள் சந்தித்து, தாங்கள் பெற்ற பயிற்சி குறித்து கலந்துரையாடினார்கள். இந்நிகழ்வில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ்,இ.ஆ.ப., தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.கிராந்தி குமார் பாடி, இ.ஆ.ப., உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே கிராமப்புறம் மாணவர்களுக்கு இலவச பயிற்சி



திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே உள்ள பூளவாடி கிராமத்தில் உள்ள நூலகத்தில் மாணவர்கள் சுலபமாக ஆங்கிலத்தில் பேச உதவும் வகையில் இலவச ஆங்கிலப் பயிற்சி நடைபெற்றது பயிற்சி முகாமில் தன்னார்வலர்கள் மற்றும் கோவை தன்னம்பிக்கை பேச்சாளர் மற்றும் ஆங்கில பயிற்சி ஆசிரியர் ரவி காந்தன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பயிற்சி வழங்கினார் நிகழ்ச்சியில் ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

- நிருபர் ஆனந்தகுமார்





சென்னை ஆதம் பாக்கத்தில் உள்ள பச்சையம்மன் கோயிலில் சாமி சிலையிலிருந்த தங்கத் தாலி மற்றும் வெள்ளிக் கொலுசைத் திருடிய ரீபல் (30) என்பவரைக் கைது செய்து போலீசார் நடவடிக்கை.

## கடந்த 27ந்தேதி சென்னை கொருக்குப்பேட்டையில் பயங்கர தீ விபத்து!







சென்னை கொருக்குப்பேட்டை கேளச் ரோட்டில் பாரத் பெட்ரோலியம் நிறுவனத்துக்கு சொந்தமான பெட்ரோல் பங்க் உள்ளது இதற்கு பின்புறம் பத்திற்கும் மேற்பட்ட இரும்பு குடோன் பழைய டயர்கள் பராமரிப்பு மற்றும் அட்ட பெட்டி குடோன்களும் உள்ளன இன்று மதிய ஒரு மணிக்கு மேல் திடீரென அட்டைப்பெட்டி பராமரிப்பு குடோனில் இருந்து கரும்பு புகையுடன் தீ மனமளவென பரவ ஆரம்பித்தது அதில் வேலை செய்த பத்துக்கு மேற்பட்ட ஊழியர்கள் குடோனில் இருந்து தப்பி வெளியே ஓடி வந்தனர் தீ பரவியதும் குடோனில் இருந்த மற்ற அட்டைப்பெட்டிகளுக்கும் பரவியதும் தீ கொழுந்துவிட்டு எரிய தொடங்கியது உடனே அருகில் இருந்த பெட்ரோல் பங்க் ஊழியர்கள் பெட்ரோல் போடுவதை நிறுத்திவிட்டு வெளியே ஓடி வந்து தீயணைப்பு வீரர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டது கொருக்குப்பேட்டை எழில் நகரில் உள்ள தீயணைப்பு நிலையத்தில் இருந்து தீயணைப்பு வண்டி மற்றும் தண்டரப்பேட்டை ராயபுரம் ஆகிய பகுதியிலிருந்து தீயணைப்பு வண்டி மற்றும் தண்ணீர் லாரி கொண்டு தீ வேறு எங்கும் பரவாத வண்ணம் தீய கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் இரண்டு மணி நேரம் போராடி தீயணைத்தனர் விரைந்து வந்து தீயை அணைக்க தொடங்கியதால் அருகிலிருந்த மற்ற குடோன்களுக்கும் பெட்ரோல் பங்குகளுக்கும் தீ பரவாத கட்டுப்படுத்தியதில் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது இதை குறித்து ஆர்கே நகர் போலீசார் வழக்கு பதிவு செய்து தீ எங்கிருந்து பரவியது என்பதை குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

இந்த தீ விபத்தின் போது கரும்பு புகை வந்ததால் அப்பகுதியில் இருந்த பொது மக்களுக்கு இரும்பல் மற்றும் மூச்சு திணறல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது

## மீஞ்சூர் அடுத்த புங்கம்பேடு புனிதபுரி பிருந்தாவனத்தில் ஸ்ரீ ராமானுஜருக்கு வைரமுடி கிரீடம் சமர்ப்பிக்கும் திருவிழா!



திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் அடுத்த புங்கம்பேடு புனிதபுரி பிருந்தாவனத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மத் நாராயண பிருந்தாவன ஆசிரமத்தில் ஸ்ரீ பகவத் ராமானுஜரின் 1008 வது திரு அவதார தினத்தை முன்னிட்டு மகா உற்சவ திருமஞ்சனம் நடைபெற்றது. ரூ.1 கோடி மதிப்பிலான வைர கிரீடம் ராமானுஜருக்கு மேல தாளங்கள் முழங்க 108 திவ்ய தேசங்களில் இருந்து சீர் ஊர்வலமாக கொண்டுவரப்பட்டு ஸ்ரீ சின்ன ஜீயர் உ.வே. சுதர்சனாசாரியர் சுவாமிகளால் அணிவிக்கப்பட்டது, பின்னர் பல்வேறு சிறப்பு ஆராதனை நடைபெற்று பக்தர்கள் வழிபாடு செய்தனர்.108 திவ்ய தேசங்களான ஸ்ரீரங்கம் ரங்கநாதர் சுவாமி திருக்கோவில்,ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவில், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி திருக்கோவில், திருவள்ளூர் வீரராகவர் கோவில்,திருநின்றவூர் என்னைப் பெற்ற தாயார் பக்தவச்சல பெருமாள் திருக்கோவில்,திருப்பதி திருமலா தேவஸ்தானம், உள்ளிட்ட வைணவ திருத்தலங்களில் இருந்து சீர்வரிசைகள் எடுத்துவரப்பட்டு புங்கம்பேடு நந்தவனத்தில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டு கோவில் பிரகாரம் வழியாக மேளதாளங் களுடன் சங்கநாதம் முழங்க எடுத்து வந்து ராமானுஜருக்கு அணி வித்தனர்.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ சீனிவாசர், ஸ்ரீ ரங்கநாதர்,ஸ்ரீ யோக நரசிம்மரை தரிசனம் செய்தனர். இந்நிகழ்ச்சியில் முன்னதாக பல்லக்கு ஊர்வல சேவையை மருத்துவர் ஆன்மீக செம்மல் மீஞ்சூர் மருத்துவர் விஜயராவ் கோவில் நிர்வாகத்தினருடன் சிறப்பாக செய்திருந்தார். நிகழ்ச்சியில் வல்லூர் சேகர்,மீஞ்சூர் பேரூராட்சி மன்ற தலைவர் ருக்மணி மோகன்ராஜ், மீஞ்சூர் பேரூராட்சி 18 வது வார்டு கவுன்சிலர் ராஜன் மற்றும் கிராம பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர் அதனைத் தொடர்ந்து நிர்வாகத்தின் சார்பில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

## இராமேஸ்வரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நகர் 12வது மாநாடு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் நகரின் 12வது மாநாடு 27.05.2025 அன்று ராமேஸ்வரத்திலுள்ள ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி திருமண மண்டபத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நகர் 12வது மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

மாநாட்டிற்குத் தோழர்கள் ஜி.செந்தில், ஊ.லட்சுமி மற்றும் ஹ.பாண்டி ஆகியோர் தலைமை வகித்தனர். மாதர் சம்மேளன மாவட்ட செயலாளர் P.வடகொரியா முன்னிலை வகித்தார்

தோழர் லெ.வெங்கடேசன் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார்.

தோழர் V.கருப்பையா வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாநாட்டு கொடியை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் தோழர் எஸ்.முருகானந்தம் ஏற்றி வைத்தார்.

மாநாட்டை தொடங்கி வைத்து மாவட்ட செயலாளர் தோழர் என்.எஸ்.பெருமாள் உரையாற்றினார்.

வேலை அறிக்கையை முன் வைத்து நகர் செயலாளர் தோழர் சி.ஆர்.செந்தில்வேல் பேசினார்.



சி.ஆர்.செந்தில் வேல்

மாநாட்டில் 31 உறுப்பினர்களைக் கொண்ட புதிய நகர் கவுன்சில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தேர்வு செய்யப்பட்டவர்கள்:

நகர் செயலாளராக 'பொதுவுடைமை நாயகன்' தோழர் சி.ஆர்.செந்தில்வேல் அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.துணைச் செயலாளர்களாக தோழர்கள் M.செந்தில், G.பாண்டி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பொருளாளராக தோழர் M.பிச்சை அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார் மாநாட்டை நிறைவுரையாக மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் தோழர் என்.கே. ராஜன் உரையாற்றினார்.

நன்றியுரையை தோழர் M.பிச்சை நிகழ்த்தினார்.

இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் மீட்க மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்களை உடனடியாக நியமிக்க வேண்டும். இதனை சிறப்பு மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்ட மீனவர்களால் பிடிக்கப்படும் நண்டுக்கு நியாயமான விலை உறுதி செய்ய வேண்டும்.

பாம்பன் வேர்க்கோடு பேருந்து சேவையை புதுரோடு வரை நீட்டிக்க வேண்டும்.

இராமேஸ்வரம் பகுதியில் புதிய ஆட்டோ பெர்மிட் வழங்குவதை தடை செய்ய வேண்டும்.

ஆட்டோ ஓட்டுநர்களுக்கு மானிய விலையில் பெட்ரோல் மற்றும் எரிவாயு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். போன்ற தீர்மானங்கள் மாநாட்டில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

-G.பாண்டிகுமார்
நிருபர்,இராமேஸ்வரம்

## திருப்பூர் மாவட்டம் உடுமலையில் புதிய பேருந்து நிலையம் காணொளி காட்சி மூலம் திறப்பு!



திருப்பூர் மாவட்டம் உடுமலை பழனி ரோட்டில் மூன்று 3.75 கோடி மதிப்பில் அதிமுக ஆட்சியில் நிதி ஒதுக்கப்பட்ட நிலையில் பல வருடங்களாக புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வந்தது இந்த நிலையில் தற்போது பல ஆண்டுகளுக்கு பிறகு இன்று தமிழக முதல்வர் சென்னையில் இருந்து காணொளி காட்சி மூலமாக புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்தார் பொள்ளாச்சி எம்பி ஈஸ்வரன் மற்றும் நகராட்சி அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

- நிருபர் ஆனந்தகுமார்

## கள்ளக்காதலனுடன் சேர்ந்து கணவரை கொன்ற மனைவி; வக்கீல் மீது நம்பிக்கை இல்லாததால் சட்டப் படிப்பு படிக்க அடம்: சிறையில் கர்ப்பமாக இருப்பதால் அதிர்ச்சி

கணவரை கொன்று ட்ரம்மில் போட்டு சிமென்ட் கலவையால் மூடிய மனைவி தற்போது சிறையில் கர்ப்பமாக இருக்கும் நிலையில், தனது வக்கீல் மீது நம்பிக்கை இல்லாததால் சட்டப் படிப்பு படிக்க அனுமதி கேட்டு அடம் பிடித்து வருகிறார். உத்தர பிரதேச மாநிலம் மீரட் நகரைச் சேர்ந்த பிரமோத் கவிதா தம்பதியின் மகள் முஸ்கான் ரஸ்தோகி, அதே நகரைச் சேர்ந்த சவுரவ் சுக்லாவை திருமணம் செய்து கொண்டார். ஆனால் முஸ்கானுக்கு ஷாஹில் சுக்லா என்பவருடன் கள்ளத்தொடர்பு ஏற்பட்டது. இவர்கள் இருவரும் சேர்ந்து சவுரவை கொலை செய்தனர்.

முன்னதாக கடந்த 2023ம் ஆண்டு முதல் லண்டனில் கப்பல் துறையில் பணி புரிந்த சவுரவ் சுக்லா, கடந்த மார்ச் 4ம் தேதி மீரட் வந்துள்ளார். ஆனால் அதன் பின்னர் அவர் எங்கு சென்றார் எனத் தெரியவில்லை. அவரைக் காணவில்லை எனப் போலீசில் புகார் தெரிவிக்கப்பட்டது. போலீசாரின் தொடர் விசாரணையில், சவுரவ் மனைவி முஸ்கான் ரஸ்தோகி மற்றும் அவரது கள்ளக் காதலன் ஷாஹில் சுக்லாவும் சேர்ந்து சவுரவை கொலை செய்தது உறுதி செய்யப்பட்டது. கத்தியால் குத்தி கணவரைக் கொலை செய்ததாகவும், பின்னர் உடலை ஷாஹில் உதவியுடன் துண்டு துண்டாக வெட்டி ஒரு ட்ரம்மில் போட்டு அதில் சிமென்ட் கலவையைப் ஊற்றி மூடியதாகவும் வாக்குமூலம் அளித்தனர். அதையடுத்து முஸ்கான்





ரஸ்தோகி அவரது காதலர் ஷாஹில் சுக்லாவைக் கைது செய்து போலீசார் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தக் கொலை வழக்கில் தங்களின் மகள் இந்தச் சமூகத்தில் வாழத் தகுதியற்றவர் என்றும், அவருக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்றும் பெற்றோர் தங்களது மருமகனுக்காக நீதி கோரியுள்ளனர். இவ்வழக்கு மீரட் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் நிலையில், குற்றம் சாட்டப்பட்ட முஸ்கான் ரஸ்தோகி, தனது வழக்கை தானே வாதாட விரும்புவதாகவும், அதற்காக சட்டப் படிப்பை பயில அனுமதிக்குமாறு சிறை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். தற்போதைய வழக்கறிஞர் மீது தனக்கு சார்பாக வாதாடவில்லை என்றும், அவரது செயலால் தான் அதிருப்தி அடைந்து இருப்பதாகவும், தனது வழக்கை தனியாக எதிர்கொள்ள முடிவு செய்துள்ளதாகவும் கூறியுள்ளார். தற்போது முஸ்கான் மற்றும் அவரது கள்ளக்காதலன் ஆகியோரின் ஜாமீன் மனுக்கள் நிராகரிக்கப்பட்டதை அடுத்து, மீரட்டில் உள்ள சவுத்ரி சரண் சிங் மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டனர்.

முஸ்கான் 8ம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ளார் என்பதால், சட்டப் படிப்பை தொடர, முதலில் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்க வேண்டும் என்று சிறை அதிகாரிகள் தெரிவித்தனர். இந்திரா காந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழகம் (இக்னோ) மூலம் அவர் படிப்பைத் தொடரலாம் என்றும், சிறை அதிகாரிகள் தேவையான வசதிகளை வழங்குவார்கள் என்றும் சிறை கண்காணிப்பாளர் விரேஷ் ராஜ் ஷர்மா கூறினார். முஸ்கனின் பெற்றோர்களான கவிதா மற்றும் பிரமோத் ரஸ்தோகி ஆகியோர் தங்களது மகளுக்கு எதிராக சாட்சியமளித்துள்ளதால், அவர்களின் வாக்குமூலங்கள் குற்றப் பத்திரிகையில் சேர்க்கப்பட்டுள்ளன. சிறையில் வழக்கமான மருத்துவ பரிசோதனையின் மேற்கொண்ட போது முஸ்கான் தற்போது கர்ப்பமாக இருப்பது கண்டறியப்பட்டதாக சிறைத்துறை அதிகாரிகள் கூறினர்.

## காட்டுப்பள்ளி ஊராட்சியில் அதானி துறைமுகம் சார்பில் 1.40 கோடி மதிப்பீட்டில் திட்ட பணிகள் திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது




திருவள்ளூர் மாவட்டம் காட்டுப்பள்ளியில் இயங்கி வரும் அதானி துறைமுகத்தின் சார்பில் நலிந்த ஊராட்சிகளுக்கு பல்வேறு நல திட்ட பணிகளை செய்து வருகின்றனர், கல்வி, விவசாயம், தானிய விதைகள் வழங்குதல், துப்புரவு பணிகளில் உபகரணங்கள் வழங்குதல் ,என பல்வேறு நல திட்டங்களில் கிராம மக்களுக்கு உதவிசெய்து வருகின்றனர் , மேலும் சுய உதவிக் குழு பெண்களுக்கு சிறப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டு அவர்கள் சுயமாக வாழ்வில் முன்னேற தொழில் செய்வதற்கு உண்டான உதவிகளை செய்து வருகின்றனர், இயற்கை விவசாயம் செய்யும் தொழிலாளர்களுக்கு நல்ல விதைகளையும், மருந்து வகைகளையும் இலவசமாக வழங்கி ஊக்கப்படுத்தி வருகின்றனர், அதேபோன்று நலிந்த ஊராட்சிகளுக்கு தேவையான பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் செய்து வருகின்றனர் ,அதன் அடிப்படையில் மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்டது காட்டுப்பள்ளி ஊராட்சி குப்பம் முதல் அப்பல்லோ சி எஃப் எஸ் வரை 1200 மீட்டர் தார் சாலை கிராம வளர்ச்சி நிதியின் கீழ் ரூபாய் 72 லட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைத்துத் திறக்கப்பட்டது, மேலும் 52 லட்சம் மதிப்பீட்டில் காட்டுப்பள்ளி ஊராட்சி கருங்காலி முதல் தாங்கள் பெரும்புலம் ஊராட்சிக்கு இணைப்பு சிமெண்ட் சாலை, மற்றும் கடலில் கரைக்கு வந்து நிற்கும் படகுகளை மேடு பகுதிகளுக்கு எடுத்து வர 10. 67 லட்சம் மதிப்பீட்டில் டிராக்டர் உள்ளிட்ட திட்ட பணிகள் என சுமார் ஒரு கோடியே 39 லட்சத்து 67 ஆயிரம் மதிப்பீட்டில் திட்டப் பணிகள் திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் துறைமுக முதன்மை அதிகாரி செழியன் ஆபிரகாம், திட்ட மேலாளர் ஜேசுராஜ், மற்றும் அதானி பவுண்டேஷன் அலுவலர்கள், காட்டூர் ஊராட்சி மன்ற தலைவர் கே.எஸ். செல்வராமன், தாங்கள் பெரும் புலம் ஊராட்சி மன்ற தலைவர் ஞானவேல், மற்றும் கிராம பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## தொழில் பார்ட்னர் சூனியம் வைத்திருப்பதாக கூறி பரிகார பூஜை செய்து தொழிலதிபர் மனைவியிடம் 76 கிராம் தங்கம் பறிப்பு: தொழிலை முடக்கிவிடுவதாக மிரட்டிய கோயில் பூசாரி கைது

தொழில் பார்ட்னர் சூனியம் வைத்திருப்பதாக கூறி கட்டுமான தொழிலதிபர் வீட்டில் பரிகார பூஜை செய்து 76 கிராம் தங்கம் நகைகள் மோசடி செய்த கோயில் பூசாரியை போலீசார் கைது செய்தனர். சென்னை மந்தைவெளி ஸ்ரீ வேங்கடட்ம டிரஸ்ட் பாக்கம் பகுதியை சேர்ந்தவர் எஸ்.பி.ஆர். ரமேஷ்(56). தொழிலதிபரான இவர், பெரிய அளவில் ரியல் எஸ்டேட் மற்றும் கட்டுமான தொழில் செய்து வருகிறார். கடந்த சில நாட்களாக ரியல் எஸ்டேட் மற்றும் கட்டுமான ?தாழில் சரியாக இல்லை என்று தனது நண்பர் ஒருவரிடம் கூறி வந்துள்ளார்.

அப்போது அந்த நபர், பெரம்பூர் பெரியார் நகர் பகுதியில் உள்ள கோயில் பூசாரி பூர்ண பிரகாஷ் என்பவர் சொல்வது எல்லாம் நடப்பதாக கூறியுள்ளார். அதனை தொடர்ந்து தனது நண்பர் மூலம் கோயில் பூசாரி பூர்ண பிரகாஷை நேரில் சந்தித்து பேசினர். அப்போது பூசாரி தான் அறநிலையத்துறையில் உறுப்பினராக உள்ளதாக கூறியுள்ளார். அதன் பிறகு தொழிலதிபர் எஸ்.பி.ஆர்.ரமேஷ் வீட்டிற்கு கடந்த ஆண்டு ஆகஸ்ட் 18ம் தேதி கோயில் பூசாமி பூஜை பொருட்களுடன் வந்து யாகம் செய்த போது, எஸ்.பி.ஆர்.ரமேஷ் உடன் தொழில் பார்ட்னர் வளர்ச்சியை தடுக்கும் வகையில் 'சூனியம்' வைத்துள்ளார். அதை பரிகார பூஜை மூலம் தான் அதை சரிசெய்ய வேண்டும். இல்லை என்றால் உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று கூறியுள்ளார்.

அதை கேட்டு தொழிலதிபர் எஸ்.பி.ஆர்.ரமேஷ் மனைவி 2 தங்க செயின், ஒரு வலையல் என மொத்தம் 76 கிராம் தங்க நகைகள் மற்றும் குடும்ப புகைப்படத்தை பூசாரி பூர்ண பிரகாஷிடம் கொடுத்துள்ளார். பரிகார பூஜை முடிந்து பிறகு பூஜைக்கு சொடுத்த 76 கிராம் தங்க நகைகளை திரும்ப கொடுக்காமல் ஏமற்றி வந்துள்ளார். ஒரு கட்டத்தில் 10 மாதங்கள் நடத்தும் நகைகளை கொடுக்காததால், நேரடியாக சென்று நகையை தொழிலதிபர் பூசாரியிடம் கேட்டுள்ளார். அதந்கு பூசாரி உங்கள் குடும்பத்தின் மீது 'சூனியம்' வைத்து உங்களை



தொழிலை முடக்கி விடுவேன் என்று மிரட்டி வந்துள்ளார்.

ஒரு கட்டத்தில் சம்பவம் குறித்து எஸ்.பி.ஆர்.ரமேஷ் அபிராமபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அந்த புகாரின் படி போலீசார் விசாரணை நடத்திய போது, தான் அறநிலையத்துறையில் உறுப்பினராக இருப்பதாக பொய் சொல்லி தொழிலதிபரை நம்ப வைத்து சூனியம் எடுப்பதாக 76 கிராம் நகைகளை மோசடி செய்தது உறுதியானது. அதை தொடர்ந்து போலீசார் நேற்று அதிரடியாக கோயில் பூசாரியான பூர்ணபிரகாஷை கைது செய்தனர்.

அவரிடம் இருந்து தொழிலதிபர் மனைவியிடம் பெற்ற 76 கிராம் தங்க நகைகள் மீட்கப்பட்டது.

## போதைக்காக வலி நிவாரணி மாத்திரை விற்ற 2 பேர் கைது

சேலம் மாவட்டம் சங்ககிரி சிமெண்ட் ஆலை பகுதிகளில் 2 பேர், போதை மாத்திரைகளை இளைஞர்களுக்கு விற்பனை செய்து வருவதாக வெப்படை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதன் பேரில், எஸ்ஐ செந்தில் குமார், ஏட்டு பிரவீன்குமார், சரவணன் ஆகியோர் பச்சாம்பாளையம் பகுதியில் நேற்று தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது அப்பகுதியை சேர்ந்த பழைய குற்றவாளி கிரிகரன், அவரது நண்பர் முருகேசன் டூவீலரில் வந்தனர். சந்தேகத்தின் அடிப்படையில் அவர்களை போலீசார் சோதனையிட்டனர். இதில் அவர்களின் பேன்ட் பாக்கெட்டில் 40 மாத்திரைகள் இருந்தன. இந்த மாத்திரைகள் அனைத்தும் மருத்துவர்கள், அறுவை சிகிச்சையின் போது நோயாளிகளுக்கு வழங்கும் வலி நிவாரணி மாத்திரைகள் என தெரியவந்தது.

ஆன் லைனில் இந்த மாத்திரைகளை வாங்கி அதை போதை மாத்திரையாக விற்பனை செய்து வந்துள்ளது தெரியவந்தது. இளைஞர்கள் பலரும் இந்த மாத்திரைகளை விலை கொடுத்து வாங்கி தண்ணீரில் கரைத்து ஊசி மூலம் உடலில் செலுத்திக்கொண்டு





போதைக்காக பயன்படுத்தி வந்துள்ளனர். இதையடுத்து அவர்களிடமிருந்து 40 மாத்திரைகளை பறிமுதல் செய்த போலீசார், வழக்கு பதிவு செய்து கிரிகரன் (29), முருகேசன் (23) ஆகியோரை கைது செய்து குமாரபாளையம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர்படுத்தினர்.

சேலத்தில் 6 பேர் கைது: சேலம் செவ்வாய்பேட்டை பகுதியில் போதை மாத்திரைகளை புழக்கத்தில் உள்ளதாக இன்ஸ்பெக்டர் தேவராஜனுக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, தனிப்படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது ஸ்ரீமான் தியேட்டர் ஜங்சன் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்று கொண்டிருந்த 6 பேரை மடக்கி விசாரித்தனர்.

இதில், சூரமங்கலம் தர்மன்நகர் கவுதம்(எ) சந்தோஷ்(24), சந்தைப் பேட்டை தட்சிணாமூர்த்தி(23), பெரியார் நகர் அர்சுணன்(27), பள்ளப்பட்டி கோரிக்காடு தனிஷ் (25), ஜான்சன்பேட்டை கிழக்கு தெரு தங்கபாண்டியன்(எ) சூரியா (21), அய்யம் பெருமாம்பட்டி பிரசாந்த்(எ)அனு (24) ஆகியோரை பிடித்து விசாரித்தனர்.

அவர்களை சோதனை செய்த போது 760 வலி மாத்திரைகள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது. அதனை போதை மாத்திரையாக விற்பனை செய்துள்ளனர். இக்கும்பலுக்கு கவுதம் தான் தலைவராக இருந்துள்ளார். இவர் மும்பைக்கு சென்று அங்கிருந்து இந்த போதை மாத்திரைகளை வாங்கி வந்துள்ளார். கைதான 6 பேரையும் கோர்டில் ஆஜர்படுத்தி சிறையிலடைக்கும் வேலையில் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.







**"ULLATCHI TODAY"** owner and Published : R. Ravi, No. 35/63, Cheriyan Nagar, 3rd Street, New Washermenpet, Chennai - 600 081. and Printed by him at **CHENNAI OFFSET PRINTERS,** No. 19/1, 21/2, Kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai - 600 002. E-mail: ullatchitoday@yahoo.com, Cell : 9003837900, Editor : **R. RAVI**